1098

விக்ருதி ஸூ }
மாசி மீ }

ஸ்ரீ:

{ ஸம்புடம் 10
{ ஸஞ்சிகை 2

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால் மாதந்தோறும்

ப்ரசுரமாகும்

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 1 MAR 1951
MADRAS

முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்துரைத்த கோன்,
புனிதன், பூவைவண்ணனண்ணல் புண்ணியன் விண்ணவர்
தனியன்சேயன் தானொருவனாகிலும் தன்னடியார்க்கு
இனியன், எந்தையெம்பெருமானெவ்வுள்கிடந்தானே.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 1 MAR 1951
MADRAS

——— ப்ரசுரிக்கு மிடம் ———

நெ. 2. ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,

சென்னை—7.

வர்ஷச் சந்தா }
ரூபா **3—0—0** }

தனிப்பிரதி விலை **0-4-0**

{ FEBRUARY **1951**
{ VOL. 10. NO. 2

விஷய ஸூசிகை

	விஷயம்		பக்கம்
1	ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்	...	34
2	அனந்தாழ்வான் அளித்த அகவல்	...	37
3	சில ஸ்தோத்ர காவ்யங்கள்	...	40
4	உபயவேதாந்த ஐககண்ட்யம்	...	44
5	செய்திகள்	...	47
6	பூர்வாச்ரமத்தில் பிள்ளைபாக்கம் ஸ்ரீ அழகியசிங்கர்		50
7	ஸதுபதேசம்	...	52
8	ஆச்ரமஸ்வீகாரம் (43. வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்)	...	57
9	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸுப்ரபாதம்	...	58
10	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்	...	59

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி-ஞு பங்குனி-மீ 1951-ஞு மார்ச்–எப்ரல்-மீ

(சிசிர ருது–மீன-மீ)

14—3—51	1உ	புதன்கிழமை	...	சூன்யதிதி–மீனரவி-22 - 2
15—3—51	2உ	வியாழக்கிழமை	...	அஷ்டமிதிதி
16—3—51	3உ	வெள்ளிக்கிழமை	...	நவமிதிதி
17—3—51	4உ	சனிக்கிழமை	...	அதிதி
19—3—51	6உ	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வஏகாதசி
23—3—51	10உ	வெள்ளிக்கிழமை	...	பங்குனிஉத்திரம்
25—3—51	12உ	ஞாயிற்றுக்கிழமை	...	த்விதீயை–த்ருதீயை–திதித்வயம்
3—4—51	20உ	திங்கட்கிழமை	...	ஸர்வஏகாதசி
5—4—51	23உ	வியாழக்கிழமை	...	பேதாயனஅமாவாஸ்யை
6—4—51	24உ	வெள்ளிக்கிழமை	...	அமாவாஸ்யைதிதி
13—4—51	31உ	வெள்ளிக்கிழமை	...	மீனசுக்லஸப்தமிதிதி-மேஷரவி–42-24 (இன்று ஸங்க்ரமண தர்பணம்.)

(குறிப்பு)—1—3—51 அஷ்டமி-நவமி திதித்வயம், இன்று அஷ்டகாச்ராத்தம், மறுதினம் அன்வஷ்டகாச்ராத்தம் செய்யவேண்டும்.

ஸ்ரீ:



ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபிலமடம்

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் தனியன்.

ஸ்ரீமச்ச்ரீரங்க ப்ருத்வீச்வரசடரிபுணா ஸம்யமீந்த்ரேண த்ருஷ்டம்
ந்யஸ்தாத்மானம் ந்ருஸிம்ஹே நரஹரிசடஜித்யோகிநேது: ப்ரஸாதாத்
ப்ராஜ்ஞஞ்ச்ரீரங்ககாரிப்ரபவயதிபதே: ப்ராப்தலக்ஷ்மீந்ருஸிம்ஹா
ஸ்தானம் ஸேவே யதீந்த்ரம் ஸகலகுணநிதிம் வீரரக்ஷீட்சடாரிம்॥

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப
யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீமத்ஸ்ரீரங்க ப்ரத்வீச்வரசடரிபுணா ஸம்யமீந்த்ரேண த்ருஷ்டம்
ந்யஸ்தாத்மாநம் ந்ருஸிம்ஹே நரஹரிசடஜித்யோகிநேது: ப்ரஸாதாத்
ப்ராஜ்ஞஸ்ரீரங்ககாரிப்ரபவபதிபதே: ப்ராப்தலக்ஷ்மீந்ருஸிம்ஹா
ஸ்தாநம் ஸேவே யதீந்த்ரம் ஸகலகுணநிதிம் வீரரக்வீட்சடாரிம்

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர
மஹாதேசிகாய நம:

[திருநக்ஷத்திரம் கார்த்திகைமீ பூராடம்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } விக்ருதி ௵ மாசி ௴ { ஸஞ்சிகை 2

அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

ராஜா—இப்படி கால சக்ரத்தின் சுழலில் நம்மையழுத்துவதற்குப் பயந்தே நான் ஜீவனை இந்தக் கால சக்ரத்தின் ஹிம்ஸைக்கு வெளிப்படுத்த ஆசைப்படுகிறேன். 'ஸ்ம்ருத்வா ஸம்ஸாரவஹ்நேர் யதத கணவதி தத்வம்' என்று நசிகேதஸ் ஆசைப்பட்டான். பூதம்—போன காலம்; பவ்யம். வருங் காலம் முதலிய விபாகங்களோடு கூடி எப்பொழுதும் விகாரங்களையும், ஜந்ம மரணாதி துக்க பரம்பரைகளையும் விளைவிப்பது இந்தக் கால விபாகங்களாகிய சாலசக்ரச் சுழல். இந்தக்காலசக்ரம் சுழலாத, அதன் பிரிவுகளால் விகாரங்களைச் செய்யாத, ஓர் மோக்ஷ ஸ்திதியையும் அறிவிக்க தர்மராஜனை நசிகேதஸ் வரன் கேட்டார். 'ந கால ஸ்தத்ர வை ப்ரபு:' என்றபடி காலத்திற்கு ஸ்வாதந்த்ர்ய மில்லாத ஸ்தாநம்- நிலை. அது பரமாத்மாவும், அவன் நித்ய ஆநந்த ஸ்தாநமும்.

இதை விவரிக்கிறேன்.

காலாவர்தாந் ப்ரக்ருதிவிக்ருதீ:
காமஹோமேஷு தோஷாந்
ஜ்வாலாகர்தாந் ப்ரதிஷ்டிதா
உக்ரது:க்கௌகவாநலஹேதிம் ।
யாயாதய்யம் ஸ்வைரநிபதம்
யஸ்ய திவ்யம் பதம் தத்
காருண்யம் ஸர்வாவி விதந்து
க்ஷஸ்திக்ஷேத வாஸ்ய ॥

இது முமுக்ஷுத்வாதிகாரத்தில் முதல் ச்லோகம். இந்த நாடக க்ரந்தத்திலிருந்து பின்பு சரம க்ரந்தமான ரஹஸ்யத்ரயஸாரத்தில் அங்கே சேர்க்கப்பட்டிருக்கலாம்.

காலாவர்தாந்—காலச் சுழல்கள் மிகக் கொடும் சுழல்கள். ப்ரஹ்மாதி தேவர்களும் இச் சுழல்களுக்கு உட்பட்டவர்.

ப்ரக்ருதிவிக்ருதீ:- ப்ரக்ருதியெனும் மூல ப்ரக்ருதி கண்ணுக்குத் தெரியாத ஸூக்ஷ்மமாக யிருந்தாலும், அஸத் என்று சொல்லும்படி இருந்தாலும், அதுஜீவர்களை யெல்லாம் அசேதநரைப்போல அஸத்துக்களைப்போலச் செய்விப்பது. விக்ருதிகள் மற்ற மஹதஹங்கார பூதேந்த்ரியாதிகள். இவற்றின் பரிணாமமான தேஹம் கடைசியடியில் கூறப்படுகிறது. 'ப்ரக்ருதிவிக்ருதிகள்' என்று ஒரேபதமாகக் கொண்டு, ஸாங்க்ய காரிகையில் 'ப்ரக்ருதிவிக்ருதய: ஸப்த' என்று சொல்லப்பட்ட மஹதஹங்காராதி ஸப்தகத்தைக் குறிக்கலாம். தேஹமிருந்தால் எத்தனையோ காம இன்பங்களை யநுபவிக்கலாமே என்றால், அதில் இப்போதும் தோஷங்களுண்டு. அந்யாயத்தில் சென்றால் பின்பும் நரகாதி துக்கங்களும் வருவதை இரண்டாமடி கூறுகிறது.

ஜ்வாலாகர்தாந்—தீக்குழிகள் என்று ஸாராஸ்வாதிநீ. அத்தீக்குழிகளில், குயவன் சூளையில் புடமாவதுபோல கும்பீபாக நரகத்தில் புடமாகும் துயரை 'உக்ரது:க்கௌகவாநலஹேதிம்' என்பதால் காட்டுகிறார். முன்பாதியில் கூறப்பட்ட இத்துன்பங்கள் எப்படி வருகின்றன? நம் வினைகளாலேயே வருகின்றன. 'பாபம் க்ருச்ச்ரார்ஜிதம் யத்தத்' என்றபடி நாம் மிக்க ச்ரமப்பட்டு வெகுகாலம் செய்யும் கர்மங்களால் வருகின்றன. இந்த துரிதங்கள் ஸ்வக்ருதம்; அயலார் செய்ததல்ல; நாமே செய்தது. இதன் பயனான துக்கங்களைத் தருபவன்யார்? 'பரன்' எனும் ஈச்வரன். அவன் நமக்கு விரோதியா? சத்ருவா? இல்லவேயில்லை. அவன் நமக்கு 'மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத்' நம் ஸந்தோஷங்களில் அவனுக்கும் நம்மிலும் அதிக ஸந்தோஷம். 'விதேவ

வ்ரிதாஷ்ருதி' அவன் மார்பில் அணைய ஆசைப்படுகிறவன். 'நித்யஹ்ருத்யாவிஜீவ:' என்பதற்கு 'புத்ரனுகையால் மார்போடணைக்க ஆசைப்பட்டவனு யிருந்தும்' என்றும் பொருள் கூறப்பட்டது. இந்த பாக்யம் எப்போது எப்போது என்று காத்திருப்பவன். நம்மைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ளவே ஸததமும் பத்நியோடு சேர்ந்து கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறவன். நம்முடைய அபேக்ஷையை மட்டும் அபேக்ஷித்திருப்பவன். 'ரக்ஷாபெக்ஷாம் ப்ரதீக்ஷதெ'. நல்வினை தீவினைகளைக் கஷ்டப்பட்டுச் செய்வர். இதனுல் காராக்ருஹவாஸமும் விலங்குகளுமே கிடைக்கின்றன. புண்யத்தினுல் கிடைப்பது தங்கவிலங்கு. 'ஸுவர்ணஷைலொஹொகெஷ்வகாவராரோஹவதி' என்னும் மோக்ஷ ஸஞ்சாரங்களுக்குப் பொன்விலங்கும் தடை செய்வதே.

> 'க்ஷெமெஷூ ஷுஷெத ஸாவஸஞ்ஜரணொ
> ஸ்ரூகாய காராகாரஹெ கநகஸ்ருஜ்ஜம
> யாஜவி பஸ:'

என்றதை நினைக்கவேணும். எனக்குப் பாத கதியை ஸ்வச்சந்த ஸஞ்சார நடையைக் கொடுக்கவேண்டாம். அதற்கு விரோதியான விலங்காகிய புண்யங்களைத் தொலைத்துவிடுமென்று ராமனை ஜாமதக்நியர் சரணுகதிசெய்து ப்ரார்த்தித்தார். 'ஸஹஸாஹந்மய ஸ்ரீநிஹயம் ஹிநஷூ' என்று தயாசதகம் விளக்கிய ஸ்ம்ருதி. அவரைப்போல் 'சரணம்' என்றுகூறிக் காப்பாற்றக்கோரினுல் போதும்; நீயே அடைக்கலமென்று நினைத்து மனத்தினுல் புகுந்தால் போதும். இது நமக்கும் அவனுக்கும் வகுத்த இட்டுப்பிறந்த ஸம்பந்தம். இந்த ஸம்பந்தத்தை இருவரும் ஒழிக்க முடியாது. ஒருநாள் சேர்ந்தே தீரவேணும். அவன் விடவேமாட்டான். 'உன்றன்னேடுறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது'. 'வியிநிதிதவெதஷங்டம்'. இத்தனை ஸுலபமான ஓர் உபாயத்தினுல் கிடைப்பதென்ன?

யதுதிவ்யம்பஹம் தஸ்- 'யதஃவரொதிவொஜ்யாதிதீப்யெதெ' என்று வர்ணிக்கப்படும் திவ்ய 'அநுத்தம, உத்தம லோகங்கள்'. அங்கே காலாவர்த்தங்கள் அடியோடில்லை; ப்ரக்ருதியுமில்லை; ப்ரக்ருதி விகாரங்களுமில்லை. தமஸ்ஸுக்குப் பரமான லோகம் அது. அதிலிருந்து இந்த மாநவாவர்த்தத்தில் ஆவ்ருத்தியே கிடையாது. 'தேஹம்' என்பது சிறை. இதுதான் நமக்கு இட்டுப் பிறந்த ஸாம்ராஜ்யத்தைத் தகைவது. நமக்கும் திவ்ய பரமபதநாதனுக்கும் உள்ள ஸம்மந்தத்தையும் நம் நிஜ ஸ்வரூபத்தையும் பரஸ்வரூபத்தையும் மறைப்பது. 'தெஹயொகாஆ ஸொZவி' என்ற ஸந்த்யாதிகரண ஸூத்ரத்தை இங்கே நினைக்கிருர். நம்முடைய ஸ்வரூபத்தின் உண்மையை மறைப்பதும் நம்மை ஸம்ஸாரபத்தராய்ச் செய்வதும் தேஹந்தான் என்றங்கே ஸூத்ரகாரர் காட்டியது.

இந்த தேஹச் சிறையிலிருந்தும் ஸம்ஸாரச் சிறையிலிருந்தும் விடுதலையாகி ஸ்வந்த திவ்ய வீடு சேரும் விஷயத்தில் நிகரற்ற நிவ்ருத்தி தர்மமே வடிவெடுத்தவரான தேவரீர்தான் சதுரமாய் ஸஹாயம் புரிந்து எங்கள் ஆசையைப் பூரணம் செய்யவேணும். உம்மைப் போன்றவரில்லை. உம்மிலும் பெரியாரில்லை. தேவரீர் வாகம்ருத வர்ஷம் பாப வெப்பத்தால் வெந்தவரை உயிர்ப்பிக்கும்.

> ஸாதுர்யஷிஹிரவ்யஷெஷிகெ:
> ஷொகெஷஷவீ ஷாதயா।
> தத்ரவிஷ ஷஷவநூக்ஷிதம்
> வாணீகஜீவ வாஹி ஜெதத:॥

பகவானே! காட்டில் கண்களைக் கட்டிவிட்டுக் கண் தெரியாமல் திகைப்பவருக்கு ஸ்வந்த ஊருக்கு வழி செல்லக் காருணிகர்கள் கண்ணில் பட்டு அவர்கள் நம் கண்ணைத் திறந்து 'இப்படி வழி இப்படி வழி' என்று சொல்லிக் கைகாட்ட வேணும். இப்படிக் கண்ணைத் திறந்து காட்டுபவர் காட்டில் செல்லும் வழி யறிந்த சக்ஷுஷ்மான்கள் பார்ப்பார்கள். இப்படி உலகத்தில் காட்டில் வழி காட்டுவதுபோல, ஸம்ஸாரக் காட்டில் குருடரைப் போல வெளியே செல்ல வழி தெரியாமல் திகைப்பவருக்கு ஜ்ஞானக் கண்ணைத் திறக்கும்படி செய்து 'இது

நல்வழி இது கெட்ட வழி' என்று காட்டுபவர் வழியறிந்த தேசிகர். த்ருஷ்டத்தில் உலகத்தி லுள்ளது போல அத்ருஷ்டமான வேதாரண்ய மார்க்கத்திலும் இப்படியே என்பதை, 'லோக வேதபதவீ' என்று லோக வேத ஏகரீதி ந்யாயத்தைக் குறிக்கிறார். '[illegible]', '[illegible]' என்பர். சாந்தோக்யோபநிஷத்தில் ஸத்வித்யையில் 7-வது த்ருஷ்டாந்தத்தில் இப்படியே நிரூபிக்கப்பட்டதை ஸ்வாமி இங்கே தேவர்ஷிமுகமாக நினைப்பூட்டுகிறார். சந்தோக ஸாமகாந லோலர் நாரதர். ஸம்ஸாரக்காடுகளில் நல்வழி காட்டுவது ஆரண்யகமான உபநிஷத்து.

[illegible]:— கண் தாத்காலிகமாக லோபித்திருக்கின்றதே யொழிய நித்யமும் பொட்டையல்ல. '[illegible]' என்று பாணிநி ஸூத்ரம்.

[illegible]:—வழிகாட்டும் தேசிகர் கிடைப்பது அல்ப லாபம். '[illegible]' என்றபடிகளில் கடைசியில் பெறுவது ஆசார்ய ப்ராப்தி.

[illegible]—'[illegible]' என்பதுபோல வெளியில் தாண்டிச் செல்வது அரிது. வழிகாட்டும் தேசிகரன்றியில் வழி காணமுடியாது.

'[illegible]', என்பது '[illegible]' என்றிருக்கலாம்; அல்லது '[illegible]' என்றும் இருக்கலாம். புண்டரீகனைக் கடாக்ஷித்து மோக்ஷம் செல்லும்படி ரக்ஷித்ததுபோல இந்த ஜீவனையும் காக்கவேணும். புண்டரீக த்ருஷ்டாந்தத்தோடு மந்த்ரார்த்த க்ரந்தம் தொடங்கிற்று. '[illegible]' என்று அங்கு உதாஹரித்த வசநம் மேலே கூறிய சாந்தோக்ய ஸத்வித்யை 7-வது த்ருஷ்டாந்தத்தில் '[illegible]' என்று கூறியதை மூலமாகவுடையது. இந்த ச்லோகத்தில் அந்த ச்ருதி ஸ்ம்ருதிகள் இரண்டையும் நாரத விஷயத்தில் சேர்த்துப் படிக்கிறார். இப்படி ஆசார்யனால் கடாக்ஷிக்கப்பட்டு வழி காட்டியதும் உடனே; '[illegible]' என்று உபநிஷத்து தான்கூறிய பலம் கிடைக்கும் நிச்சயத்தைக் கூறிற்று.

[illegible]:— எப்படி முன்பு பதரிகாச்ரமத்தில் புண்டரீக முநிவரை திருவஷ்டாக்ஷரோபதேசத்தால் ரக்ஷித்தீரோ அப்படிக் காக்கவேணுமென்று ப்ரபாவளீ வ்யாக்யாநம். கீதையில் '[illegible]' என்ற ச்லோகத்தால் கூறப்பட்ட ஸ்வாமி போன்றவர் தத்வதர்சிகள்.

வ்யவஸாயர்—'ஆசார்யசரண' ரூபமான ஸ்வாமியின் ஸ்வதர்மத்தைத் தானே இங்கே விவேகராஜா ப்ரார்த்திக்கிறார். '[illegible]' என்பது ஜ்ஞாந தத்வ ஸாக்ஷாத்கார முடைய ஜ்ஞாநிகளுக்கு, தம்மை முறைபாய் உபஸர்ப்பணம் செய்யும் அதிகாரிகளுக்குத் தங்கள் ஸாக்ஷாத்காராநுபவம் ஸங்க்ரமிக்கும்படி உபதேசிப்பதின் ஔசித்யத்தை விதிப்பதுபோல் விளக்குவதாகுமென்று கருத்து. 'ஆசார்யர்களுக்கு ஸ்வதர்மம்' என்பது 'அவர்களுக்கு விதிக்கப்பட்ட தர்மம்.' '[illegible] ......[illegible]' என்னுமிடத்தில் '[illegible]' என்பதற்கு '[illegible]' என்று வேதாந்த ஸாரத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் பொருளுரை.

நாரதர்— எனக்கு மிக்க ப்ரியத்தையே விவேக மஹாராஜர் ஆஜ்ஞாபிக்கிறார். என்னால் கூடியவளவு ஸாரமான வழியை யநுஸரிப்பதை ஸாரம்போல் இனிக்கும்படியான ரஸ வழியிலேயே நான் ப்ரயத்நம் செய்கிறேன். '[illegible]' ஸாரம், பலம், சக்தி என் சக்திக்குள்ளளவும் என்று நாரதருடைய மிகவிநயமான வார்த்தை. '[illegible]', என்ற விநயம்போல். 'ஸார' என்பதற்கு ரஸம் என்றும் சிஷ்யனுக்கு இது ந்யாய்யம், இது ச்ரேஷ்டமான ரஸம் என்று ப்ரீதி ஸ்நேஹங்கள் உண்டாகும்படி' என்றும் பொருள். '[illegible]' என்ற ஆசார்ய க்ருத்யாதிகார ச்லோகத்தில் '[illegible]', என்பதற்கு இருவர் ப்ரீதி ரஸத்தையும் ஒருவாறு கொள்ளலாம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அனந்தாழ்வான் அளித்த அகவல்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரே. திருமலே அய்யங்கார், தமிழ் வித்துவான்,
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

ஸ்ரீமந் நாராயணன் தனது அஸாதாரண பரம க்ருபையாலே சேதநோஜ்ஜீவநார்த்தம் இவ் விருள்தருமா ஞாலத்தில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்கள் பலவுள. இந்த லீலாவிபூதியின்கண் இன்புறுமிவ் விளேயாட்டுடையனுன எம்பெருமான் ஸாந்நித்யம் செய்தருளியிருக்கும் திவ்யதேசங்கள் பல வகைப்படும். ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்தருளப்பெற்ற திருப்பதிகள், ஆசார்யர்கள் உகந்தருளின திருப்பதிகள், ஆழ்வார் ஆசார்யர்கள் அவதரித்த திருப்பதிகள், புராணங்களில் மஹர்ஷிகளால் பரம புண்ய ஸ்தலமாகக் கொண்டாடப்பெற்ற திவ்ய ஸ்தலங்கள், தீர்த்த விசேஷங்கள், நதி விசேஷங்கள் என்றிப்படி பல திறத்தன. திருமாலின் அபிநவ தசாவதாரம் என்று கொண்டாடப் பெற்றுவரும் மாலுகந்த வாசிரியராம் ஆழ்வார்களின் மங்களாசாஸநம் வாய்ந்த திருப்பதிகள் திருவரங்கம் முதல் வைகுந்த நாடளவும் நூற்றெட்டாம். திருமால் அர்ச்சாவதாரரூபியாய் எழுந்தருளியிருக்கும் திவ்ய ஸ்தலம் திருப்பதி. உகந்தருளிய நிலங்களாகையால் இவற்றிற்குத் 'திரு' என்ற அடைமொழி கொடுக்கப்பெற்றுள்ளது. 'திருப்பதி' என்பது அத்தலங்களேயும் அவற்றில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களேயும் குறிக்கும். இத்திருப்பதிகளின் வகை,

'ஈரிருபதாம் சோழம்; ஈரொன்பதாம்
பாண்டி;
ஓர் பதின்மூன்று மலே நா(டு); ஓரிரண்
டாம் சீர் நடுநா(டு)
ஆறோடீரெட்டுத் தொண்டை; அவ்வட
நா(டு) ஆறிரண்டு;
கூறு திருநா (டு) ஒன்முக் கொள்.'

[நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி- காப்பு.6]

[சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பதாகும். பாண்டியநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டாகும். மலேகள் நிறைந்த சேரநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்ருகும். சிறப்புப் பொருந்திய நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டாகும். தொண்டைநாட்டுத்திருப்பதிகள் இருபத்திரண்டாகும். தூரத்திலுள்ள வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டாகும். சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற பரமபதம் என்ற திவ்ய லோகம் ஒன்ருகும். இவ்வாருகத் திருமாலின் திருப்பதிகள் நூற்றெட்டு என்பதை அறிந்து கொள்வாயாக.] என்ற திவ்யகவி பிள்ளேப்பெருமாளேயங்கார் பாடல் காட்டுகின்றது. இந்த நூற்றெட்டுத் திவ்ய தேசங்களின் திருநாமத்தையும், புராண ஸ்தலங்கள் என்று ப்ரஸித்தமான ஆறு திருப்பதிகளின் திருப்பெயரையும் பெரும்பாலும் அடைமொழி யில்லாதபடி அடுக்கி, அவை யனேத்திலும் பெரிய பிராட்டியாருடன் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமந் நாராயணன் எளியேன்மனத்திலும் வீற்றிருந்து உலகத்தை அளித்தருள்க வென்று வாழ்த்திய ஐம்பத்தொன்பது அடிகள் கொண்ட நேரிசையாசிரியப்பாவா யமைந்துள்ளது நூற்றெட்டுத் திருப்பதி யகவல் எனப் பெயர்கொண்ட அரியதொரு ப்ரபந்தம். இச்சீரிய நன்னூல் எம்பெருமான் உயிர்களே உய்வித்தற்பொருட்டு எழுந்தருளியிருக்குந் திவ்ய தேசங்கள் அனேத்தையும் ஒருங்கு கூறிய திருப்பதிக் கோவை. இந்த ஆசிரியப்பா, ஸகல பாகவதர்களும் அநுதிநமும் பாராயணஞ் செய்வதற்கு உரியதென்பது கூறவேண்டுவதின்று. இவ்வகவல் தென்பாண்டி நன்னுட்டிற் பல இடங்களில் ஸ்ரீவைஷ்ணவர் பலர்க்கு வாய்ப்பாடமாயுள்ளது.

இதனே இயற்றிய இருந்தமிழ் நூற் புலவர் பெருந்தகை, இராமநாதபுரம் சதாவதானம் முத்துசாமி ஐயங்காரென வழங்கிய அனந்தாழ்வான் என்பவர். இத் திரு நாமங்களே முக்தி ஸ்வாமி ஐயங்காரென்னும், அநந்தாரியரென்றும், சேஷாத்ரி சர்மா வென்றும் கூறுவதுமுண்டு. இவர், இராமநாதபுர ஸம்ஸ்தான

த்திற் சின்ன ப்ரதானியாயிருந்த ஸ்ரீ கிருஷ்ணையங்காருடைய ப்ரபௌத்ரர் (பேரன் புதல்வர்); ஸ்ரீ சேஷாத்ரி ஐயங்காருடைய பௌத்திரர்; பங்காருசாமி ஐயங்காரென வழங்கிய ஸ்ரீ நாராயணையங்காருடைய குமாரர்; இத்திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க மஹா வித்வானாய்த் திகழ்ந்துவரும் ஸ்ரீ உ.ப. மு. இராகவையங்காருடைய தந்தை, இராமநாதபுரம் ஸமஸ்தான வித்வானாய் விளங்கிய பாஷா கவிசேகர, ரா. இராகவையங்காருக்கு மாதுலர்; வடமொழி தென்மொழிகளில் தேர்ந்து நால் வகைக் கவிகளையும் பாடுந் திறத்தினராகிக் கண்டவர் கேட்டவர் வியக்குமாறு பற்பல இடங்களில் விசித்ர சதாவதானமும் செய்து அதிப்ரஸித்தி பெற்ற அந்தணச் சிரேட்டர், இராமநாதபுரம் ஸமஸ்தான வித்வானா யிருந்தவர்; ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய க்ரந்தங்களில் ஆழ்ந்த பரிசயம் உடையவர்.

மேலே குறிக்கப்பெற்றுள்ள கிருஷ்ணையங்கார், கி. பி. 1763 முதல் 1795 வரை இராமநாதபுரத்தில் அரசாட்சி செய்த முத்துராமலிங்க சேதுபதி மகாராஜாவினிடம், பெரிய ப்ரதானியாகிய முத்திருளப்பப்பிள்ளையை யடுத்து, சின்னப்ரதானியாய் விளங்கியவர்; இவரது சிலையுருவம், இராமேசுவரத்திற் சொக்கட்டான் சேரி மண்டபத்தில் இப்பொழுதும் இருக்கின்றது. இவருடைய குமாரர் சேஷாத்ரி ஐயங்கார். அவரது புதல்வராகிய பங்காரு ஸ்வாமி ஐயங்காருடைய புத்திரர்கள் அஷ்டாவதானம் கிருஷ்ணையங்காரும், சதாவதானம் முத்துசாமி ஐயங்காரு மென இருவர். இவர்களில் மூத்தவர் அஷ்டாவதானத்தில் அதிக நிபுணர்; வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லவர்; சமய நூலாராய்ச்சி பெரிது முடையவர்; வடமொழிக் கடனிலை கண்டவரும், சேதுவேந்தராலும் சேதுபதிமந்திரி உலகம் புகழும் பொன்னுச்சாமித் தேவராலும் மிகவும் வெகுமானிக்கப் பெற்றவரும், பரதகண்ட முழுதும் புகழும் கல்வி அறிவொழுக்கங்கள் நிரம்பியவருமான மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளாலும் மெச்சப்பட்ட சிறப்புடையது. இளையவரே, இங்கு குறித்த நூலின் ஆசிரியர்.

இப் புலவர்திலகம், மிக்க இளமையிலேயே தமிழ்ப் புலமையும் அவதான சக்தியும் மிகமிக வாய்ந்து, மைசூர்க்குச் சென்று, அங்கு அப்பொழுது ஆட்சிபுரிந்த ஸ்ரீ கிருஷ்ணராஜ வுடையாரது முன்னிலையில் கன்னட பாஷையில் அநேக அவதானங்கள் நடத்தித் தமது புலமைத்திறத்தைக் காட்டி, அவ்வரசரால் பல்லக்கு, குடை, முத்துமாலை, பொற்குவை முதலிய பெரும் பரிசுகள் அளிக்கப் பெற்றவர். பெருமாள்கோயில் எனச் சிறப்பித்துக் கூறப் பெறுகிற காஞ்சீபுரத்திற் சதுச்சாஸ்திர பண்டிதராயிருந்த திருப்புட்குழி அப்பா வென்னும் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ண தாதாசார்யஸ்வாமி முதலிய மஹாவித்வான்களின் ஸந்நிதியிலும், திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ சுப்ரமணியதேசிகர் முன்னிலையிலும், மற்றும் சென்னப்பட்டணம் முதலிய பல இடங்களிலும் இவர் செய்த அவதானங்கள் மிக வியக்கத்தக்கன. இவர் செய்த அவதானசக்தி திரிசிரபுரம் மஹாவித்வானும், மஹாகவியும், நூற்றுக்கணக்கான பெருந் தமிழறிஞர்க்கெல்லாம் நற்றமிழாசிரியருமான மீனாக்ஷிசுந்தர நாவலரால் வியந்து பாராட்டப்பெற்ற தனிச் சிறப்புடையது. ஒருகால் இவர் இராமநாதபுரத்து ராஜஸபையில் அவதானஞ் செய்துகொண்டிருந்த பொழுது ஒரு வித்வான் திருவாய்மொழிப் பாசுரமொன்றை யெடுத்துக் கொண்டு அக்ஷராவதானங் கேட்க, ஐந்தெழுத்து வருவதற்குள் அப்பாசுரத்தையே கூறிச் சபையை வியக்கவைத்தனர் என்றும் தெரிகிறது. இவர் இராமநாதபுரம், ஆழ்வார்திருநகரி, திருவல்லிக்கேணி மைசூர் முதலிய இடங்களில் வசித்தபோது மிகப்பலர் இவரிடம் பாடங்கேட்டனர்

இவரிடம் கல்வி பயின்று தேர்ந்தவர்கள்: சேது ஸமஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார், இராமநாதபுரம் வித்வான் அரங்கசாமி ஐயங்கார், செந்தமிழ்ப் பத்ரிகாசிரியர் திரு. நாராயணையங்கார், மதுரைத் தமிழ்ச் சங்க ஸ்தாபகரான பாண்டித் துரைத் தேவர், அரியக்குடி வித்வான் கிருஷ்ணமாசார்யர், ஆழ்வார்திருநகரி வித்வான் தேவராஜ ஐயங்கார், சேஷையங்கார், கிருஷ்ணையங்கார், பெங்க

ளூர் சிலாசாஸந பரிசோதநாத்யக்ஷரா யிருந்த ஆர். ஏ. நரஸிம்மாசார்யர் எம். ஏ. முதலிய பலர்.

மற்றும் இவரியற்றிய தமிழ் நூல்கள் :— திவ்ய தேசங்கள் விஷயமான அநேகம் பதிகங்களும், மணவாளமாமுனி நூற்றந்தாதியும், சூத்திரமும் உரையுமாக அமைந்த சந்திராலோகமும், குருகைக்கலம்பகமும், சடகோப மஹாதேசிகனந்தாதியும் முதலியன. இவ்வந்தாதி நூற் பிரதியுள்ள அன்பர் உதவின், அதனை அச்சிட்டு இலவசமாக வழங்க எமது சங்கம் முற்படும். மஹாதேசிகன் அருள் புரிவாராக.

நூற்றெட்டுத் திருப்பதி யகவல் பாராயண யோக்யமா யமைந்துள்ளமையின் அதனை இங்கு தருகின்றேன்.

உலகுய ரரங்க முறையூர் தஞ்சை
அன்பில் கரம்பனூ ராதனூர் வெள்ளறை
கண்டியூ ரழுந்தூர் கவித்தலம் புள்ளம்
பூதங் குடிசிறு புலியூர் குடந்தை
திருவிண் ணகரந் திருத்தலைச் சங்க
நாண்மதியந் திருப்பேர் நகர்திருச் சேறை
வெள்ளியங் குடியரி மேயவிண் ணகரம்
வண்புரு டோத்தம மாலி நறையூர்
சித்திர கூடஞ் சீராமவிண் ணகரம்
காவளம் பாடி கண்ண மங்கை
நந்திபுர விண்ணகர நாகை யிந்தளூர்
கண்ணங் குடி திருக் கண்ண புரமணி
மாடக் கோயில் வைகுந்தவிண் ணகரம்
கூடலூர் வெள்ளக் குளமணிக் கூடம்
தேவனூர் தொகை திருத் தெற்றி யம்பலம்
செம்பொன்செய் கோயில் திருப்பார்த்தன் பள்ளி
சோழநாட் டிடைமறை சொற்பதி
மாலிருஞ்சோலை வரகுணமங்கை [நாற்பதின்
புல்லாணி மெய்யம் புளிங்குடி மோகூர்
குருகூர் கோட்டி கூடல்வை குந்தம்
குளந்தை குறுங்குடி கோளூர் புதுவை
தொலைவில்லி மங்கலந் தூய்த்திருப் பேரை
சீவர மங்கை திருத்தண் காலூர்
பாண்டிநாட் டிடைவாழ் பதிபதி னெட்டின்
போற்று மனந்த புரம்புலி யூர்செங்
குன்றூர் வித்துவக் கோடு மூழிக்
களம்வண் பரிசாரங் காட்கரை நாவாய்
வாறன் விளைவண் வண்டூர் வல்லவாழ்
திருக்கடித் தானந் திருவாட் டாறு
பகர்மலை நாட்டிடைப் பதிபதின் மூன்றின்
திருவகீந் திரபுரந் திருக்கோவ லூர்நடு
நாட்டிடை யிரண்டு நலந்தரு பதியின்
அத்திமா மலையூ ரகந்திருத் தண்கா
புட்குழி யட்ட புயங்க நீரகம்
காரகம் வெஃகா கள்வனூர் பாடகம்
நின்றவூ ரெவ்வுளூர் நிலாத்திங்கட் டுண்டம்
திருவே ளுக்கை திருக்கார் வானம்
பவளவண் ணம்பர மேச்சுரவிண் ணகரம்
திருவிட வெந்தை திருக்கடன் மல்லை
அல்லிக் கேணி வளர்திருக் கடிகை
நீர்மலை தொண்டை நெடுநாட் டிடையின்
இன்புறும் பதிக ளிருபத் திரண்டின்
வேங்கடஞ் சிங்கவேள் குன்ற மயோத்தி
தேங்கிய வதரியாச் சிரம நைமி
சாரணியம் பிரிதி சாளக் கிராமம்
கங்கைக் கரைவாழ் கண்டந் திருவாய்ப்
பாடி துவாரகை பாற்கடல் மதுரை
வடநாட் டிடையின் மன்னிய பதிகள்
பத்துட னிரண்டிற் பரம பதமெனுந்
திருநா டொன்றிற் சேர்த்து நூற் றெட்டில்
யதிபதி யருளா லியற்றிய திருநா
ராயண புரந்திரு ராசமன் னார்கோயில்
மன்னிய விருந்தா வனம்பெரும் பூதூர்
மெய்ப்புகழ்ப் பாப விநாசஞ்சீர் முட்டம்
புராணநூற் றலங்கள் போற்றுமோ ராறின்
உலகிடை மற்றுள வோங்கிய பதியின்
மலர்மக ளுடனே மன்னிய திருமால்
ஏழையே னுளத்தி லிருந்திங்
கூழியி னழியா வுலகளித் திடவே.

அனந்தாழ்வான் அளித்த அகவலை அன்போ டோத அல்லல் போம்; அகாரவாச்யனின் அருள் சுரக்கும்; அலர்மேல்மங்கை யுறை மார்பன் வேண்டிற்றெல்லாம் தரும்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்³ரஹ்மணே நம:

ஸ்ரீ உப. காளி, ரங்காசார்ய ஸ்வாமியின்

சில ஸ்தோத்ர காவ்யங்கள்

[ஸ்ரீ. உப. M. R. ராஜகோபாலய்யங்கார், M. A., L.T., திருக்குடந்தை.]

ஸ்ரீ. உப. வித்வந் மண்டல மண்டநம் காளி ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி தர்க்க வ்யாகரண மீமாம்ஸா வேதாந்த ஶாஸ்த்ரங்களில் நிஷ்ணாதர் என்பது வித்வத்கோஷ்டிகளில் ப்ரஸித்தம். வேதாந்தத்தில் சங்கர, ராமாநுஜ, மத்வ எனப்பட்ட மும்மதபாஷ்யங்களிலும் அவர் ப்ரவீணரென்பதும் அவர் ஶாஸ்த்ரக்ரந்தங்களைப் பரிசீலனம் செய்த நிபுணர்கள் அறிவர். ஶாஸ்த்ர ஜ்ஞாநத்துடன் உயர்ந்த கவிதையும் அவரிடத்தில் சேர்ந்திருப்பது போற்றத்தக்கது. தன் கவிதையை பகவானுடைய மஹிமையையும், கல்யாணகுணங்களையும், துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலநத்தையும் விஷயமாகக்கொண்டு ஸபலமாக்கவேண்டுமென்ற கருத்துடன் உத்தமமான நான்கு ஸ்தோத்ரகாவ்யங்களை அந்த ஸ்வாமி செய்துள்ளார். அவர் க்ரந்தங்களின் சிறப்பில் அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டிய சில அம்சங்களை இங்கு எழுதத்துணிகிறேன்.

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்தவம்

ஆழ்வார்களுக்கு ராமக்ருஷ்ணவதாரங்களிடம் போலவே ந்ருஸிம்ஹாவதாரத்தில் அதிகமான ஈடுபாடு எப்படி இருந்ததோ அதேமாதிரி ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமிக்கும் ந்ருஸிம்ஹனிடத்தில் பக்தி மிகுந்திருப்பதை இந்த ஸ்தோத்ரத்தின் பூர்வபாகம் உத்தரபாகம் இரண்டிலுமாக 435-ச்லோகங்களில் விஸ்தாரமாக வெளியிட்டிருக்கிறார். பற்பல சிறந்த வ்ருத்தங்களில் ச்லோகங்கள் அமைந்திருக்கின்றன.

முதலில் ப்ரஹ்லாத சரித்ரத்தின் கதை சில ச்லோகங்களால் ஸங்க்ரஹமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிரண்யவதத்தை வர்ணிக்கும் ச்லோகமிது.

ஏவம் நிஶ்சிதயோர்த்³வி ப்ரஹாரதயா
நிர்பி⁴த்³ய தை³த்யேஶ்வர:
வக்ஷ: ஸஞ்ஜக்³ருஹே விமுச்ய நிஷ்டு²ரோ
யஸ்மை ஜீவாத்மஸம்ஹாரிணி ।

ஸ்வாபே⁴ப்⁴யோऽபி நிவார்ய தம் நிஜ
நயே ப⁴க்த்யா விதா⁴யோத்³த்⁴ருதம்
ரக்ஷாஸ்த²ம் ச நிஷீய ஶோஷகரணம்
ஸ்தம்ப⁴ஸ்த²ம் ஹரிஸ்த²ம் ப⁴ஜே ॥

என்று ஶார்தூலவிக்ரீடித வ்ருத்தியில் எழுதியுள்ள சார்தூலவ்ருத்த ச்லோகம் ரௌத்ர, பீபத்ஸரஸங்கள் உதிக்கும்படி செய்வது கவனிக்கத்தக்கது. பிறகு பத்து அவதாரங்களில் பகவான் செய்த அற்புதச்செயல்களையும் விசேஷமாக க்ருஷ்ணவதாரத்தில் நடத்திக்காட்டிய வைபவங்களையும் அநேக ச்லோகங்களில் வர்ணித்திருக்கிறார் கவி. அதன் பின் அர்ச்சாவதாரவிஷயமாகச் சில ச்லோகங்கள் காண்கின்றன.

பகவானுடைய ரக்ஷகத்வத்தை விளக்கும் யுக்மமான இவ்விரு ச்லோகங்களும் முகுந்தமாலையில் எல்லோருமறிந்த ஒரு ச்லோகத்தின் அர்த்தத்தை விஸ்தரித்துக் காட்டுகின்றன:-

வித்³ராவ்ய ப்ராவ்ருதஹாவரம் ப்ரஶமிதோ-
பாயா விநிஷ்காஸிதம்
க்³ராஹாக்ருஷ்டபதா³ம்பு³ஜம்
காருண்யவதிப்ராப்ததிக்ஷ்டாம் தயா ।
ஸ்வாராஜா ப்ரவிஷூஷிதாம் விநிக்ருதம்
பா³லம் ஜநந்யா தயா
தார்க்ஷ்யாரூட⁴ ப்ரவ்ருத்³த⁴யம் த்ருணாஸ்த்ர
வகிதம் ஹ்ராத்ரா நிரஸ்தம் ப³ஹி: ॥
ப்ரஹ்லாத³ம் ச விபீ⁴ஷணம் கரிவரம்
பாஞ்சாலராஜாத்மஜாம்
ஶிஷ்டாந் ப்ருத்²வீஸுதாந் ஸ்வவநிதா
மந்தா³நவாஸாத்மஜாந் ।
கோ³பீவ்ருந்த³ம் ஸமஸ்தவாஸியம்
ஸாரதே²ஸ்ஸ்வந்தம் ச ஸஞ்ஜயாத்மஜம்
யோ விஷ்ணுஸ்ஸமிதம் ரரக்ஷ
க்ருபயா தம் ஶ்ரீந்ருஸிம்ஹம் ப⁴ஜே ॥

பகவானுடைய ரக்ஷகத்வத்தை வியந்து பா

ராட்டும் பின்வரும் ச்லோகமும் ரம்யமாகக் காண்கிறது:-

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நிர்ஹேதுக க்ருபை என்பது தவறு. வ்யாஜத்தை அபேக்ஷிக்கின்றது பகவத்க்ருபை என்பதை நிரூபிக்கிற ச்லோகம் ஒன்றைப் பார்க்க:-

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இப்படி நூறு ச்லோகங்களில் ந்ருஸிம்ஹரூபியான பகவானை ஸ்தோத்ரம் செய்தபின்னர், ஸ்தோத்ர வ்யாஜத்தைக் கொண்டு வேதாந்த விஷயங்களை ஸுலபமான முன்னூறுக்கு மேற்பட்ட ச்லோகங்களால் நிரூபணம் செய்கிறார் கவி.

பின்வரும் ஸ்ரீசார்ங்கபாணிஸ்தவத்தில் போல இங்கும் ஒரே ச்லோகத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் மதத்தின் ஸாரத்தைச் சுருக்கி எழுதியிருக்கிறார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தத் த்வம் அஸி என்று மஹாவாக்யமாக அத்வைதிகளால் கொண்டாடப்பட்டு, அந்த வாக்யம் ப்ரஹ்மத்துக்கும் ஜீவனுக்குமுள்ள ஐக்யத்தைக் கூறுகிறது என்ற அர்த்தவர்ணனை ஸரியல்ல என்று இரண்டு ச்லோகங்களால் நிரூபிக்கிறார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீபாஷ்யத்திலும் ச்ருதப்ரகாசிகையிலும் அதிகரணஸாராவளியிலும் ஸமர்த்திக்கப்பட்ட பல யுக்திகளும் நிர்வாஹங்களும் ச்லோக ரூபமாக வெளிவந்திருக்கின்றன. ஆனால் பத்ரிகையில் எனக்குக் கிடைக்கும் அவகாசத்திற்குள் ஒரு சில ச்லோகங்களை மாத்ரம்தான் உதாஹரணமாக இங்குக் காட்டமுடியும்.

ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் மற்றவை எல்லாம் பொய்த்தோற்றம் என்று சொல்லி உபநிஷத்வாக்யம் ஒன்றைப் ப்ரமாணமாக எடுப்பவர்களுக்குப் பதில் இரண்டு ச்லோகங்களில் விடுக்கப்பட்டிருக்கிறது,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ப்ரஹ்மத்தையறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்ற அர்த்தம்கொண்ட ச்ருதிவாக்யத்திற்கு ப்ரஹ்மத்துக்கு ஸமானமாகிறான் என்றே பொருள் என்கிறது பின்வரும் ச்லோகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

முக்திஸ்வரூபத்தைப்பற்றி த்வைதிகளும் அத்வைதிகளும் கூறும் கொள்கைகள் ச்ருதிக்குப் பொருந்தா. முக்தியில் ஜகத்வ்யாபாரம் தவிர மற்ற விஷயங்களில் ப்ரஹ்மத்துடன்

ஸமமான ஆநந்தாநுபவம் என்பதே ஸரி என்று ஒரு ச்லோகத்தில் காட்டுகிறார்.

முக்தாநாம் ப்ரஹ்மஸாம்யம் தரதமரஹிதம்
வேதிந: கேசிதாஹு:
நாஜ்ஞாநந்த்வேஹ தேஷாம் ப்ரதிஷ்டமுப
வரம் ஸாம்யமஸ்தீதி வாக்யே ।
ஸ்வாராட் முக்தாவஹேதுர் ஸ்வதி இதமிதி
ரோ ப்ரஹ்மணா போகமாத்ரம்
த்வக்ஷா ஸ்ருஷ்ட்யாதிகர்ம ப்ரஹ்மநாவதி
ஸமம் ப்ரஹ்மணாऽऽநந்தலேஷ: ॥

நுட்பமான வேதாந்தார்த்தங்களை ஸரளமான பதங்களால் அழகான ச்லோகங்களில் அநாயாஸமாக எழுதித்தருவது ஸ்ரீ ரங்காசார்யஸ்வாமியின் கவிதாஶக்தியின் உயர்ந்த குணம்.

அவித்யை என்ற ஒரு பதார்த்தத்தை அங்கீகரிப்பதில் ஸ்ரீபாஷ்யகாரர் எடுத்துக்காட்டிய எழுவிதமான அநுபபத்தியை சில ச்லோகத்தில் தெரிவிக்கிறார். அத்வைதமதத்தில் முக்தி என்பது கேவலம் சித்ஸ்வரூபம்; அந்த தசையில் அந்த சித் வேறொன்றையும் அறிவதில்லை என்கின்றனர். தார்க்கிகர் முக்திதசையில் ஆத்மா பாஷாணம் போல் ஜ்ஞாநமோ, சேஷ்டையோ, எதுவுமின்றி நிற்கிறது என்கின்றனர். இவ்விரண்டுக்கும் பேதம் அதிகமில்லை என்று ஒரு ச்லோகத்தில் கவி நிரூபிக்கிறார். மோக்ஷத்துக்கு உபாயம் மித்யையான மார்க்கம் என்கின்றனர் அத்வைதிகள்; அதுவும் யுக்திக்கு விரோதமானதே.

அஸத்யவதேவோபாய விஷ்வக் ப்ரபஞ்சம்
ஹந்த ஹந்தே । ஸதக்ஷ ஸாமாந்யம் ப்ரஹ்ம
லக்ஷணாயவர: ப்ரவக்ஷதே ॥

இப்படிப் பலவிதமாய் இதரமதகண்டநம் செய்து விசிஷ்டாத்வைதமே ச்ருதியை அநுஸரிக்கிறது என்கிறார் ஸ்தோத்ரகர்த்தா.

சில ச்லோகங்களில் விஷ்ணுவே பரதேவதை என்று புராணங்களிலிருந்தும் ச்ருதியிலிருந்தும் வாக்யங்களை ப்ரமாணமாகக்காட்டுகிறார்.

விசிஷ்டாத்வைதிகள் மோக்ஷத்துக்கு ஸாதனமாகக் கொண்டாடும் ப்ரபத்தி மார்க்கத்தை வர்ணித்து அதற்கும் மஹாவிச்வாஸம் முதலிய அங்கங்கள் அவச்யமாயிற்றே அவை ஸுலபமல்லவே. அதனால் நாமஸங்கீர்த்தனமே பலருக்கு ஸாத்யமாகும் என்றும் எண்ணுகிறார்.

இந்த ஸ்துதியில் சிலவிடங்களில் அபூர்வமான பதங்கள் ப்ரயோகிக்கப்படுகின்றன. ஆனால் டிப்பணியில் அவைகளின் அர்த்தத்தை அங்கங்கேயே க்ரந்தகர்த்தா கொடுத்திருப்பதால் பொருள் அறிவது ஸுலபமே.

ந்ருஸிம்ஹாவதாரத்தின் மகிமையைப்பற்றி ஆழ்வார்கள் அருளியிருக்கும் பாசுரங்கள் அனைத்தையும் முதல்பாகத்தின் அநுபந்தமாகச் சேர்த்து தந்திருக்கிறது ஒரு விசேஷமான உபகாரம்.

கோஸகஸ்தவம்

இந்த ஸ்தோத்ரம் 85 ச்லோகங்களுடையது. சார்தூலவிக்ரீடிதம், ஸ்ரக்தரா, ப்ருத்வீ, உபஜாதி, வஸந்ததிலகம், ஸ்வாகதா, சாலிநீ முதலான பல வ்ருத்தங்களின் அழகுவாய்ந்து விளங்குகிறது.

ஸ்தோத்ரகர்த்தா தேரழுந்தூர் திவ்யதேசத்தில் பால்யத்தில் வித்யாப்யாஸம் செய்ததினால் அங்கே கோயில்கொண்டிருக்கும் ஆமருவியப்பன் என்று ப்ரஸித்தமான கோஸகனிடத்தில் பரம பக்தியுடன் இந்த ஸ்தவத்தை எழுதியிருப்பது ஸஹஜமே. அந்த திவ்யதேசத்தை மங்களாசாஸனம் செய்தருளின திருமங்கை மன்னனிடம் கவிக்குள்ள ஈடுபாடும் வெளியிடப்பட்டிருக்கிறது. பல ச்லோகங்கள் தேரழுந்தூர் ஸ்தலபுராணத்தில் காணப்படும் ஐதிஹ்யத்தை விஸ்தாரமாகப்புகழ்கின்றன. தமிழ்கவிஞரான கம்பர் இவ்வூரில் பிறந்தவர் என்று 2 ச்லோகங்கள் நினைவூட்டுகின்றன. ஆமருவியப்பனிடம் கவியின் ஹ்ருதயத்திலுள்ள பக்தியின் அதிசயத்தையும் அவர் அநுபவத்தையும் எடுத்துக்காட்டும் பின்வரும் ச்லோகங்கள் அதிமனோஹரமானவை என்று சொல்ல வேண்டியதில்லை.

ஹே வாஸுதேவ பகவந்நு பவதி ப்ரஸந்நே
தாம் ஶ்ரீபதேஸ்ய க்ருஹிணீவ வரம் நயாமே ।
க்ஷுத்ராவயி த்வயி நிரந்தரபக்திரஸ்து தேஹாவஸா-
நே யகுபைரவஶக்திரஸ்து ॥

ஏதேனும் மூன்று வரங்களைத் தருகிறோம்

என்று பகவான் நியமித்தவுடன் உடையாப் பாணையும் தேயாத் துடைப்பமும் கேட்டுப்பெற்றுள் ஒரு ஏழை ஸ்த்ரீ என்ற கதையை இரண்டாவது பாதம் குறிக்கிறது.

ஶ்ரீகோஸலே நிஜவநே ஸ்வபதம் ப்ரயாந்த்யா
வஸ்த்ராணி யாநி ஹ்ருதயம் ச ஜஹார நாத:।
தம் திவ்யதேஹஜநநம் ஸததம் ததைவ
ஹஸ்தேந ஸோபாநமதோ க்ருதவாந் ஸ்வதந்த்ர:
[ஸோபாதா]॥

ஹ்ருதயத்திலுள்ள பக்தி அதி மனோஹரமான சொற்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பத்ராஸநாதிஶயநே ஸஹிதாநுவிப்ர
ஸம்ஶ்லேஷஸௌக்யமிதம் விரஹவ்யதார்த:।
ஶக்த்யா விராஜ் ஹ்ருதயம் வநிதாங்கவேத்ரம்
தாபஸ்வபந்தி ப்ரயிவதி: க்ருதவாநிஹாத்ய॥

திருமங்கையாழ்வாரின் வைபவத்தை வர்ணிக்கும் பின்வரும் ச்லோகமொன்றை அவரிடம் கவியின் ஈடுபாட்டுக்கு நிதர்சனமாகச் சொல்லலாம்.

பாண்டித்யகீர்த்தி ப்ரஸித்தவதீம்
ஶாஸ்த்ரஸ்ய பாண்டித்யம் விஷ்ணு
நிகேதநாநி விமலஸ்தோத்ரேஷு நாம
ஸ்தோத்ரேஹ । யத்கவிதா கவிவேதிஸம்பி
ப்ரோரவ: ஸ்வீயவ்ருத்தமேநே: பவித்ரா
ஶ்ரீநாராயணமேவ தத்ஸ்வரூபம்
ஹாதம் ஸுபத்ரார்த்தநா॥

ஆழ்வாரின் நாயிகாபாவாநுபவத்தை ச்லாகித்துக்காட்டும் 51-வதுச்லோகமும் இன்னொரு உதாஹரணமாகும்.

நித்ராம் விஹாய திமிரகேஶ வராகயோகீ
ஶ்ரீவேஷயுக்த ஸ்வஹஸ்த தபவதி மேஹநாகீ।
குசாடகே வாநவஜாநுமணீவ ஹஸ்த:।
விஷ்வக்ஸேநாநி ஸகலாநி நிரஸ்ய க்ருஷ்ண॥

க்ருஷ்ணாவதாரத்தில் பலராமனுக்கு அநுஜனாகப்பிறந்து அவனுக்குதாஸ்யம்புரிந்ததற்குக் காரணம் கல்பித்துக் காட்டும் பின்வரும்ச்லோகத்தின் உல்லேகமும் பாராட்டத்தக்கது.

ராமாவதாரே நிஜஹஸ்த க்ருத்ய:
கநிஷ்ட ஶுஶ்ரூஷிதி தத்த்வஜ்ஞ:।
கநிஷ்டவேஷம் ஸ்வயமேவ க்ருத்வா
ஶ்ரீரௌஹிணேயஸ்ய ஸஸேவ கோஷ்டம்॥

வேதாந்தவிஷயமான ச்லோகங்கள் இந்த ஸ்தவத்தில் அதிகமில்லை. ஒன்றிரண்டே காணப்படுகின்றன. உதாஹரணமாக:-

ஸ்தந்யே க்ருதேந்யஜதீர்த்த ஸ்வஹஸ்த ஜநதா
ஹேதுர்த்விஜீயதே
ஸேவம் ஸாமீப்யஹேத ச
நியமேந ராஜ்ஞ ச ஸாதாரண:।
தவ தாஸ்யமேவ காரணமிதி
ஶ்ருத்யந்தராதிதஹே
ஸ ஶ்ரீகோஸலநாதோ நிஜயதே
ஶ்ரீரங்கபட்டணம் ஸதா॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திருவழுந்தூர் விஷயமான பாசுரங்கள் அனைத்தையும் ஸ்தவத்துடன் அச்சிட்டுத் தந்திருக்கிறது ஒரு உபகாரமாகும்.

இந்த ஸ்வாமியின் கவிகளில் பற்பல அரிய விஷயங்கள் நாம் முன்பு காட்டியவைபோல் தென்படுகின்றன.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜன்ஸி நிபந்தனைகள்

ஒரு தடவையில் 10 ப்ரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் காபி ஒன்றுக்கு 4 அணா வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஜககண்ட்யம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L. அட்வோகேட், திருச்சி.]

கபிலஸ்ம்ருதிச் சுடரைக்கொண்டுவேதமறையின் பொருளைக் கொள்ளவேணுமென்றால் அநேக மஹர்ஷிகளின் ஸ்ம்ருதிச் சுடர்கள் காபிலச் சுடருக்கு விரோதமாயும் ச்ருதிச் சுடரை யநுஸரிப்பதாயும் இருக்கிறதென்றதினால் காபிலச் சுடர் ஆதரிக்கத்தக்கதல்ல. மிக மஹர்ஷிகளின் விரோதத்தை 'மிகு' என்பதால் ஸூசிக்கிறார். 'ஸ்ம்ருத்யநவகாச......' 'இதரேஷாம் சாநுபலப்தே:' என்று முதல் அதிகரண ஸூத்ரங்களில் காட்டப்பட்டதையும் 'சுடர்மிகு' என்பதால் ஸூசிக்கிறார். ஹிரண்யகர்ப்பருடைய யோக ஸ்ம்ருதியும் செல்லாது. அவர் ப்ரஹ்மத்தினிடம் உபதேசம் பெற்றவர். அவருக்கு உபதேசித்த ஆதிகுருவே கீதாஸ்ம்ருதியில் இத் தத்வங்களை யெல்லாம் விளக்கியிருக்கிறார். மூலகாரண தத்வமே நேரில் உபதேசிப்பதைப் பாடிற்று — பாடி உபதேசித்தது. ச்ருதிகள் யாருடைய ஆணையோ அந்த ப்ரஹ்மமே உபதேசித்தது. ச்ருதிகளாலும் ப்ரஹ்ம ஸூத்ரங்களாலும் நிஷ்கர்ஷிக்கப்பட்ட பொருளென்று சொல்லிக்கொண்டே உபதேசித்தது. 'திட விசும்பு' என்ற ஆகாசம் மற்ற நான்கைக் கட்டிலும் த்ருடம் அவற்றிற்குக் காரணம். கார்ய க்ரமத்தில் ஐந்து பூதங்களும் குறிக்கப்படுகின்றன. 'மஹாபூதங்களித்தனையும் இத்தனையின் கார்யங்களான ஸகல ப்ரபஞ்சமும் தானாய்' என்பதால் காரணமான விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும், கார்யமான விசிஷ்டப்ரஹ்மத்திற்கும் ஸூத்ரம் காட்டிய அநந்யத்வத்தை விளக்குகிறார். 'முழுவதும் ஆய்' என்பதால் 'யச்ச கிஞ்சிஜ்ஜகத்ஸர்வம்', 'அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:' என்ற ச்ருதிகளிலுள்ள 'ஸர்வ' பதத்தை ஸூசிக்கிறார். 'ஸத்த்வாத்ஸர்வேச' என்பதை 'ஆய்' என்பதால் ஸூசிக்கிறார். 'பஹுஸ்யாம்' என்று ஸங்கல்பித்து ஆரம்பணம் செய்ததால் காரணமே கார்யமாயிற்று என்ற ஆரம்பணாதிகரணத்தை 'ஆய்' என்பதால் ஸூசிக்கிறார். ஆகாசத்திற்கும் எரி வளி நீர் நிலங்களுக்கும் வைலக்ஷண்யமிருந்தாலும் கார்யகாரண பாவத்தை ஸாங்க்யர்கள் ஒப்புவதால் அவர்கள் பக்ஷத்திலும் நவிலக்ஷணத்வாதிகரணத்தில், அவர்கள் ஜகத் விலக்ஷணமான ப்ரஹ்மம் ஜகத்துக்குக் காரணமாகாதென்று சொல்லும் ஆக்ஷேபம் அவர்கள் பக்ஷத்திலும் வருமென்றும் 'ஸ்வபக்ஷதோஷாச்ச' என்ற ஸூத்ரத்திற்குப் பொருளாக உரைக்கலாம் என்று ஆகாசாதி பூதங்கள் பூர்வபூர்வங்கள் உத்தரோத்தரம் காரணமாவதைக் குறிப்பதாம் என்று ஆழ்வார் ஸூசித்ததாக ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியின் ஸம்ப்ரதர்சநம். இவை உத்தரோத்தர காரணமாவதில் இவை யொன்றொன்றையும் பகவான் உடலாக அதிஷ்டாநம் செய்து காரணமாவதை 'ததபித்யாந' ஸூத்ரம் விளக்கியதை ஆழ்வார் இங்கே ஸூசிக்கிறார். நவிலக்ஷணத்வாதிகரணத்தில் 'ந து த்ருஷ்டாந்தபாவாத்' என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் 'சரீரத்திலுள்ள விகாரதோஷங்கள் உயிரான ஆத்மாவில் ஒட்டாததுபோல' என்று த்ருஷ்டாந்தம் கூறப்பட்டதைக் காட்டி சரீரமான சிதசித் ப்ரபஞ்சத்திலுள்ள விகாராதி தோஷங்கள் உள்ளே உயிரான பரமாத்மாவை அணுகா என்று ஸாதிக்கப்பட்டது. சரீரத்தின் லக்ஷணம் அங்கே கூறப்பட்டது. இது ச்ருதியே காட்டும் சரீரலக்ஷணமென்பதை, 'சுடர்மிகு சுருதியுள்' என்பதை அதற்குமுன் கூறிய 'உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும்பரந்துளன்' என்ற சரீரலக்ஷணத்தோடு அந்வயிப்பதால் விளக்குகிறார். சுடர்மிகு சுருதி இப்படி ப்ரஹ்மத்திற்கும் சிதசித் ப்ரபஞ்சத்திற்கும் உயிரும்

உடலுமான தன்மை' என்பதை விளக்கியிருக்கிறது. ச்ருதியே இந்த லக்ஷணத்தைக் கூறியிருப்பதால் இதை ஒருவருமாக்ஷேபிக்கத் தக்கதில்லை யென்று விளக்குகிறார். 'ஆத்மா' என்பதற்கே 'உயிராக உள்ளே வ்யாபித்திருந்து நியமநம் செய்வது' என்று பொருள். 'திஷ்டந் அந்தரோ யமயதி' என்று ச்ருதி கூறிய லக்ஷணத்தையே அழகாகத் தமிழ் செய்து காட்டுகிறார். ஆழ்வார் இந்தப் பாதத்தின் விளக்கத்தில் காட்டும் சரீரலக்ஷணத்தை ஸ்ரீ பாஷ்யகாரரும் இதே பாதத்தில் ஸாதிக்கிறார். போக்த்ராபத்திஸூத்ரத்தில், ஜகத் ப்ரஹ்மத்திற்கு சரீரமென்பதை ஸூத்ரகாரர் ஸித்தாந்தமாகக் கொண்டுதான் சரீரத்திற்குள் இருக்கும் சரீரிக்கு சரீர தோஷமெல்லாம் வருமே என்று கேட்க இடம் வருகிறது. 'கரந்து' என்பது 'யம் ப்ருதிவீ ந வேத' என்றபடி ஒவ்வொரு பர்யாயத்திலும் உடலுக்குத் தெரியாமல் என்று இருப்பதைக் காட்டுகிறது. கரந்திருந்தாலும் பரந்து வ்யாபித்திருப்பதில் குறையவில்லை. 'ஸூக்ஷ்மோ ஹி ஸூக்ஷ்மதே' என்னும் ச்ருதி ரஸத்தையும் காட்டுகிறார். ஐந்து பூதங்களையும் அடியாகக்கொண்டு மேலே விஸ்த்ருதமாக நின்றுள்ள பதார்த்தங்களெல்லாவற்றையுமுண்டாக்கி என்பதால் ச்ருதியிலும் ஸூத்ரத்திலும் சொல்லும் த்ரிவ்ருத்கரணம் பஞ்சீகரணத்தைக் காட்டுவது என்று விளக்குகிறார். பூதங்கள் பௌதிகங்களான ஒவ்வொன்றும் அவர் சரீரம். அவர் ஒவ்வொன்றுமாய் அக்கார்யமாக உளர் என்பதை 'அவையவை தொறும்' என்கிற வீப்ஸையால் காட்டுகிறார். 'யத் கிஞ்ச தத் ஸர்வம்' என்பதற்குத் தமிழாகும். 'ஆய் உளன்' என்பதால் அந்தந்தப் பொருளின் ப்ரகாரமா யுளன் என்றும் ப்ரகார ப்ரகாரிபாவத்தைக் காட்டுமழகு ரஸிக்கத்தக்கது. ச்ருதியின் சுடர் மிக்கது. சிஷ்டர்களால் பரிக்ரஹிக்கப்பட்டது. மஹர்ஷிகளால் ச்ருதிகளின் சுடர் காட்டிய வழியில் ஸாக்ஷாத்காரம் செய்து தாம் கண்டவாறே ச்ருதிக்கநுஸாரமாகவே அறுதியிடப்பட்டது. புறமதங்களுக்கு சிஷ்டர் பரிக்ரஹமில்லையென்னும் சிஷ்டாபரிக்ரஹாதிகரணத்தையும் ஸூசிக்கிறார். சேதநங்களான ஆத்மாக்களையும் உடல்போல் அபிமானித்து ஒரு க்ஷணமேனும் அகலாமல் கூடவே அருந்துணையாய் ஹ்ருதய குஹையிலிருக்கும் கருணையையும், ரக்ஷண தீக்ஷையையும், அந்தர்யாமி ச்ருதி விளக்குவதையும் ஸூசிக்கிறார். 'சுரனே' என்பதால் ஸுபாலோபநிஷத்தின் அந்தர்யாமி வாக்யம் உயிராகக் கரந்து எங்கும் பரந்துளது. 'திவ்யோ தேவ ஏகோ நாராயண:' என்று பல்கால் கூறிய நாராயண தேவனே என்பதை ஸூசிக்கிறார்.

எட்டாம் பாட்டு

சுரரறி வருநிலை விண்முதல் முழுவதும்
வரன்முத லாயவை முழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித் தமரர்க்கு மறிவியந்[து]
அரனய னெனவுல கழித்தமைத் துளனே.
(திருவாய்மொழி 1-1-8)

ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களில் ஸ்திதி என்பது பகவானாலேயே நடத்தப்படுவதென்பதில் தகராறில்லை. விச்வ ஸ்ருஷ்டியை ஹிரண்யகர்ப்பர் செய்வதாகவும், விச்வ ஸம்ஹாரத்தை ருத்ரர் செய்வதாகவும், அவர்கள் ஸ்வதந்த்ரமாய் தங்கள் சக்தியால் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்வதாகவும், 'ஸ்ருஷ்டௌ ஸ்ருஜ்ய' என்ற ச்லோகத்தில் சொன்னபடி சிலர் மும்மூர்த்திகளும் துல்யரென்றும், சிலர் மூவரும் ஒரே மூர்த்தி என்றும், சிலர் மூவருக்கும் அதீதரான ஓர் நான்காம் மூர்த்திக்கு உட்பட்டவரென்றும் பலவிதமான பக்ஷங்கள் உள. மூல ப்ரக்ருதியே ஈச்வரனென்னும் தேவனுடைய அதிஷ்டாநமில்லாமல் தானே ஸ்வயமாக ப்ரபஞ்ச ரசனை செய்கிறதென்றும் ஸாங்க்யர், பரமாணுக்களில் ஈச்வராதிஷ்டாநமில்லாமல் ப்ரவ்ருத்தி உண்டாகி அவற்றைக் கொண்டு ஈச்வரன் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறானென்றும் வைசேஷிகர் முதலிய பலபல மதங்கள் உள. அந்த மதங்கள் ஸாரமல்லவென்று 2-ம் பாதத்தின் ஸாங்க்ய வைசேஷிக பாசுபதாத்யதிகரணங்களில் ஸூத்ரகாரர் ஸாதித்ததை யெல்லாம் இங்கே ஸங்க்ரஹிக்கிறார்.

'சுரரறி வருநிலை' என்று இங்கே தொடங்குவது மிக்க ரஸம். 'சுரர்' என்கிற பஹுவச

நம் ஜகத்காரணமான ப்ரஹ்மத்தைத் தவிர மற்ற சுரகணங்கள் முழுவதையும் குறிக்கிறது. இங்கே 'விண்' என்பது அவ்யாக்ருதாகாசமான மூலப்ரக்ருதியைக் குறிக்கிறதென்று எல்லா வ்யாக்யாநங்களும் காட்டின. ப்ரஹ்ம தேவர் அண்டஸ்ருஷ்டிக்குப் பிறகு ஸ்ருஷ்டிக்கப்படுபவர். ஸமஷ்டி ஸ்ருஷ்டியாகிய 'த்ரிவ்ருத்கரணகாலத்தில் ப்ரஹ்மதேவரேயில்லை. அவர் நாமரூபவ்யாகரணமென்னும் ஸ்ருஷ்டியைச் செய்தாரென்பது பொருந்தாது. அவர் பின்பு ஸ்ருஷ்டிப்பதும் பகவான் அவருக்குள் ஆத்மாவாக இருந்து செய்விப்பதே. ருத்ரர் அவர் புத்ரர். ஸம்ஹாரமும் அவருக்குள் ஆத்மாவாக இருந்து பகவான் செய்விப்பதே. த்ரிபுர ஸம்ஹாரமென்னும் மஹத்தான ஸம்ஹாரகார்யமும் விஷ்ணு அவருக்குள் ஆத்மாவாயிருந்து நடத்திவைத்தது. கீதையில்

'ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய:। அஹமாதிர்ஹி தேவாநாம் மஹர்ஷீணாஞ்ச ஸர்வச:॥'

என்று உரைக்கப்பட்ட ஸுரஸமூஹத்தை 'சுரர்' என்கிற பன்மையால் காட்டுகிறார். அந்தக் கீதா ச்லோகத்தில்

'கோ அத்தா வேத க இஹ ப்ரவோசத்। குத ஆஜாதா குத இயம் விஸ்ருஷ்டி:। அர்வாக் தேவா அஸ்ய விஸர்ஜநேநாய। அதா கோ வேத யத ஆ பபூவ'

என்ற ருக்குகள் ப்ரஹ்மாதி சுரர்கள் விச்வ ஸ்ருஷ்டியை அறிந்தவரல்லரென்று நிரூபித்தது சந்த்ரிகையிலும் மத்வபாஷ்யத்திலும் காட்டப்பட்டது. 'யம் ந தேவா ந ருஷய: ந ப்ராஹ்மணா: ஜாநந்தி' என்கிற ப்ரஹ்ம வாக்யமும் இங்கே திருவாறுயிரத்தில் உதாஹரிக்கப்பட்டது. ப்ரஹ்மாதிகளால் அறியவரிய ஸ்வபாவத்தை யுடைத்தாயிருக்கிற விண்ணுண்டு மூலப்ரக்ருதி அது தொடக்கமாக உண்டான எல்லாவற்றுக்கும் வரிஷ்டமான காரணமாய்' என்று ஈடு. 'மே ப்ரபவம்' என்கிற கீதாச்லோக பதங்களுக்கு 'தன்னிடமிருந்து விச்வத்திற்கு ப்ரபவமென்னும் உத்பத்தியை' என்றும் பொருள் உரைக்கப்பட்டுளது. நான் பஹுவான ஸ்ருஷ்டியை என்றும் பொருள். மற்ற ப்ரஹ்மாதி சுரர்கள் மூலப்ரக்ருதி தொடங்கி ஸமஷ்டி ஸ்ருஷ்டி ஏற்படுங்காலத்தில் அறிவற்று அசித் கல்பரான நிலையில் இருந்தவர்கள். அக்காலத்தில் மற்ற சேதநராசிக்கும் அவர்களுக்கும் அறிவில்லாமையில் தாரதம்யமே கிடையாது. மற்றவர்களுக்குப்போல சுரருக்கும் ஆதி ஜகத்ஸ்ருஷ்டி நிலை அறிவரியதே. 'ப்ரக்ருத்யாத்யநதிக்ருதயோ ப்ரஹ்மாண்டயோர்விசேஷ:' என்று ஸாக்ஷாத் ஸ்வாமி. 'விண்முதல்' என்கிற பதங்களுக்கு 'முதல் விண்' என்றும் விண்முதலானவென்றும் பொருள்படும்படி அமைத்த ரஸம் ரஸிக்கத்தக்கது.

இப்பாட்டில் 'முதல் முழுது' என்கிற பதங்கள் இருதரம் படிக்கப்படுவதும், 'ஸதேவ' என்றும், 'ஏகமேவாத்விதீயம்' என்றும், 'ஸர்வமிதம் விசிஷ்டம்' என்றும் 'இதம் ஸர்வம் ஸ்ருஜத' என்றும் ச்ருதிகளில் ஸ்ருஷ்ட்யாதி ப்ரகரணங்களில் படிக்கப்படுவதின் நினைவைக் காட்டும் 'வரன் முதல்' என்பது க்ருபையாலும் ப்ரியத்தாலும் முதலில் ஸ்வயமாகவே சேதநரை ரக்ஷிக்க வரிக்கும் காரணமென்றும், அவர்களால் ரக்ஷகராகவரிக்கப்படும் காரணமென்றும் ஸூசிக்கிறது. 'ஆய்' என்பதற்கு 'ஆக்கி' 'தானுமாகி' என்று இரண்டு பொருள்களும் திருவுள்ளம். தாமும் கூட இருந்து தம்மையும் சேர்த்து ஆக்கிக்கொள்வதுதான் உலகத்தையாக்குவதாகும். இதற்கு முன் பாசுரத்தில் 'ஆய்' என்றது 'ஆக்கி' என்றபடி. 'ஆய்' என்பானென்னென்னில், 'பஹுஸ்யாம்' என்கிறதன் விகாஸமே யாகையாலே வைதிக நிர்தேசமிருக்கிறபடி' என்று ஈடு ஸம்ஸ்க்ருத மறையை ஆழ்வார் த்ராமிடோபநிஷத் முழுதும் அநுஸரிக்கும் ரஸத்தைக் காட்டிற்று.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்.

நடந்த 6-10-50 தேதியிலிருந்து ஸ்ரீமதாதி வண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் உத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டு 15-10-50வ சாற்றுமுறை நடந்தேறியது. ப்ரதிதினமும் வேத பாராயணுதி கோஷ்டிகளுடன் திருவீதி உத்ஸவம் கண்டருளினர். அக்ரஹாரஸ்வாமிகளுடைய பாக்யவசத்தால் திருமாளிகை முதலியன வாங்கிக்கொண்டு எழுந்தருளுயிருக்கும் மதத்ரய வித்வான் ஸ்ரீ. உப. காளி, வங்கீபுரம் ரங்காசார்யஸ்வாமி ப்ரதிதினமும், பண்டிதர்களும், பாமரர்களும் ரஸிக்கும்படியாக ஸ்ரீமதஷ்டாக்ஷரமாஹாத்ம்யம், ஸீதாகல்யாணம், த்ரௌபதியின் சரணுகதி, வாமனுவதாரவைபவம், கஜேந்த்ரமோக்ஷம், ஸ்ரீவிபீஷணன்சரணுகதி முதலிய சரணுகதிகள், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் வைபவம் முதலிய உபந்யாஸங்களை செய்தருளினர். உள்ளூர் ஸ்ரீஸந்நிதி ஏஜண்டு கே. கோபாலாசார்ய ஸ்வாமி ஆசார்ய வைபவத்தையும், பி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஸ்ரீந்ருஸிம்ஹன் ப்ரபாவத்தையும் உபந்யாஸம் செய்தார்கள்.

15-10-50 வ சாற்றுமுறைதினத்தன்று ஸ்ரீந்ருஸிம்ஹன், ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகன், கண்ணன், ஸ்ரீநிவாஸன் முதலிய எம்பெருமான்களை ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் மங்களாசாஸநம் செய்தருளினர். அன்று எல்லாருக்கும் விசேஷதிருமஞ்சநம் நடந்தேறியது. முதல்திநம் இடியுடன்கூடிய பெருமழையும், மறுதிநம் நின்று வீதி உத்ஸவம் ஸஹஸ்ரநாமாதிபாராயணங்களுடன் மிக்க விமர்சையாக நடந்தது. பிறகு ஸ்ரீ. உப. வித்வான் காளி ரங்காசார்ய ஸ்வாமிக்கு ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம ஸபையின் சார்பில் கே. கோபாலாசார்ய ஸ்வாமி ஸம்பாவனைசெய்து உபந்யாஸத்தின் மேன்மையை ச்லாகித்துப் பேசினர்.

மறுதிநம், மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட டோலையில் ஸ்ரீந்ருஸிம்ஹன் முதலியவர்களுடன் ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமி வடாயத்தி உத்ஸவம் கண்டருளினர். அன்று ராத்ரி உள்ளூர் நாதஸ்வர வித்வான்களுடைய வாத்யகச்சேரி வெகுநேரம் இனிமையாகநடைபெற்றன. அவர்களுக்கு ஸபையார் ஸன்மானமும் அளித்தார்கள்.

19-10-50வ வியாழக்கிழமை ஸ்ரீ. வி. ஸபையின் கோசாலயத்தில் (லைப்ரரி) ஸரஸ்வதி பூஜை சாஸ்த்ரப்படி எம். எஸ். க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி நடத்திவைத்தார். பிறகு வெத்திலை, பாக்கு, புஷ்பம், பழம் இவைகள் கோஷ்டிக்கு வழங்கப்பட்டு கோஷ்டி நன்ருக முடிவடைந்தது.

ஷை ஸபையின் 6-வது வார்ஷிக மஹோத்ஸவம் 10-1-51ல் புதுக்கோட்டை ஸமஸ்தான மாஜி தாஞதிகாரி காளி வித்வான் ஸ்ரீ. உப. வ. ரங்காசார்ய ஸ்வாமியின் தலைமையில் நடைபெற்றது.

இம்மஹோத்ஸவத்திற்கு ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீமதழகியசிங்கர், ஸ்ரீகாமகோடிபீடாதிபதி சங்கராசார்யஸ்வாமிகள் முதலிய மடாதிபதிகளிடமிருந்தும், சில ஆஸ்திகர்களிடமிருந்தும் ஆசிச்செய்திகள் வந்தன.

ஸ்ரீசங்கரமடம் ஸ்ரீகார்யம் ஸ்வாமிகள், மாயவரம் வித்வான் வரதராஜ அய்யங்கார், வித்வான் விச்வநாதசர்மா முதலியவர்கள் உபந்யாஸம் செய்தார்கள். அவ்வமயம் குழையூர். ஆர். ஸூர்யநாராயண அய்யர், டி. எஸ். ஸுந்தரமய்யங்கார் முதலிய ப்ரபலஸ்தர்களும் வந்திருந்தார்கள்.

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் முதலிய ஸ்தோத்ரங்களைப் பயின்றுவரும் 34. வித்யார்த்திகளை பரீக்ஷித்து பரிசுகளும் வழங்கப்பட்டன.

உலக க்ஷேமத்திற்காக நடத்திவரும் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணத்தை இனியும் விடாமல் நடத்தவேண்டுமென்றும், ஷை ஸபையின் புத்தகாலயத்திற்கு இலவசமாகப் பத்ரிகைகள் அனுப்பிவரும் பத்ரிகாசிரியர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்துடன் உத்ஸவம் இனிது முடிந்தது.

யஜுர்வேத மண்டல பாராயண பூர்த்தி விழா
திருக்குடந்தை

திருக்குடந்தையில் வேதபாராயண ஸபையாரால் சென்ற இரண்டு வருஷங்களாக யஜுர்வேத க்ரம பாராயணம் வருஷந்தோறும் ஓர் மண்டலம் நடத்திவருவது அனைவருக்கும் தெரிந்த விஷயம். லோகக்ஷேமார்த்தமாகவும் க்ஷாமக்ஷோப நிவ்ருத்திக்காகவும் நடக்கும் இந்த பாராயணமானது இவ்வருஷமும் கார்த்திகைமீ 20வ முதல் ஆரம்பித்து தை.மீ 4வ வரையில் அய்யங்கார்தெரு ஸ்ரீசித்தண்ணு திருமாளிகையில் நடத்தப்பட்டது. ஸ்ரீ அக்நிஹோத்ரம் பட்டுஸ்வாமிகள், ரிடையர்ட் ப்ரின்ஸ்பால் கே. எஸ். பாட்ராசார்யஸ்வாமி, எம். ஏ. முதலிய பெரியோர்களுடைய தலைமையில் ஸுமார் 25 வேதாத்யயனபரர்கள் கம்பீரமாக வேத பாராயணம் நடத்தினார்கள். அநேக ஆஸ்திக அபிமானிகள் கோஷ்டியை ஸேவித்தும், ப்ரதிதினமும் உபயங்கள் செய்தும் உபகரித்தனர். தைமீ முதல்தேதி முதல் வழக்கப்படி திருவாய்மொழி ஸேவையும் 4 தினங்கள் நடந்தது.

தைமீ 4வ புதன்கிழமை பாராயண பூர்த்தியும், ஸம்பாவனையும் நடந்தது. இதற்காக கூடின ஸபையில் நகர வைதிக, லௌகிக ப்ரமுகர்கள் பலர் வந்திருந்தனர். கும்பகோணம் பாங்க் மானேஜிங்டைரக்டர் எஸ். மஹாலிங்கய்யர் பி. ஏ. பி. எல். அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். கார்யதர்சி (ப்ரஹஸ்பதி) என். சடகோபாசாரியர் பாராயண நோக்கம் பற்றியும் ஆஸ்திகர்களுடைய உபகாரம் பற்றியும் சுருக்கமாகப் பேசினார். தலைவர் வேதமஹிமையைப்பற்றிக் கூறினார். ஸ்ரீ கே. எஸ். பாட்ராசார்ய ஸ்வாமி இந்தமாதிரி பாராயணங்களுக்குக் கூட இனி ஸங்கடங்கள் நேருமோ வென்றும் நமது ஸர்க்கார் மத சார்பு அற்றது என்று சொல்லிக்கொள்வது துரத்ருஷ்டமென்றும் பேசினார்.

த்ரிமதஸ்த பண்டிதர்கள் பலரும் வேதபாராயண மஹிமையைப்பற்றிப் பேசிய பின்பு வேதபாராயண அத்யாபக ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனை நடத்தப்பட்டது. கார்யதர்சியால் யாவருக்கும் நன்றி கூறப்பட்டு ஸபை பூர்த்தியாகியது.

ப்ரஹஸ்பதி என். சடகோபாசார்யர். கார்யதர்சி

* * * * * * *

ஸ்ரீதிருக்குடந்தை ஸ்ரீஅழகியசிங்கர்
திருநக்ஷத்ரமஹோத்ஸவம்
தில்லஸ்தானம்

நாளது விக்ருதிஸு தைமீ 8வ ஞாயிற்றுக்கிழமை ஆர்த்ராநக்ஷத்ரத்தில் (21-1-51) தில்லஸ்தானத்திலுள்ள ஸ்ரீமடத்தில் ஸ்ரீ அஹோபிலமடம் திவ்யாஸ்தானம் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ[illegible] [illegible] ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனது வர்ஷதிருநக்ஷத்ரோத்ஸவம் வழக்கம்போல் உள்ளூர் ஆஸ்திகாக்ரேஸரருன வங்கீபுரம், ஸ்ரீ. உ. வே. வீராஸாமி அய்யங்கார் ஸ்வாமியினால் நடத்தப்பட்டது. காலை ஸ்ரீ அழகியசிங்கருக்கு விசேஷ திருமஞ்சனமானதும் ஸேவை துடங்கி சாத்துமுறை ஆயிற்று. அருளப்பாடிட்டுத் திருமாலை இருப்பரியட்டம் ஸ்ரீசடாரி மரியாதைகள் நடந்தது. ஸம்பாவனைக்குப்பின் எல்லோருக்கும் பெருமாள்தீர்த்தம் ஸ்ரீபாததீர்த்தம் முதலியவைகள் ஸாதிக்கப்பட்டு உத்ஸவம் இனிது முடிந்தது.

தில்லைஸ்தானம். டி. எஸ். சேஷாத்ரி தாஸன்
26-1-51

* * *

ஸ்ரீமஹாராதநம் பண்ணுருட்டி

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தானத்தில் 40 வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஜகத்விக்யாதகீர்த்தியுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ரமஹாதேசிகனுடைய 28-வது வார்ஷிக மஹாராதன மஹோத்ஸவம் வழக்கம்போல் பண்ணுருட்டி அக்ரஹாரத்தில் ஸ்ரீ. உ. வே. சேட்லூர் பார்த்தஸாரதி அய்யங்கார் க்ருஹத்தில் 2—2—51 வெள்ளிக்கிழமை தினம் வேதபாராயண, அத்யாபக, க்ரந்த சதுஷ்டயங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு மூன்றுவது நாள் வீதி உத்ஸவம், சாத்துமுறை முதலிய

மஹோத்ஸவங்களுடன் விசேஷமாய் கொண்டாடப்பட்டது. ராமாயணபூஷணம் வித்வான் கோமல். சேஷாத்ரி அய்யங்கார் ஸ்வாமி திருப்பாப்புலியூர் அட்வகேட் டி. எஸ். ராமானுஜாசாரியார் ஸ்வாமி, கள்ளக்குரிச்சி அட்வகேட் டி. எ. தாதாசாரியார் ஸ்வாமி, பேரங்கியூர் ராஜகோபால அய்யங்கார் ஸ்வாமி இவர்களால் பல அரிய உபந்யாஸங்கள் நடைபெற்றன. இந்த மஹோத்ஸவத்திற்கு பல இடங்களிலிருந்து அனேக ஆஸ்திகர்களும் வைதிக, லௌகிக ப்ரபுக்களும் எழுந்தருளியிருந்தனர். விசேஷ ததீயாராதனங்கள் நடைபெற்றன. கடைசி தினம் ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ரஸாத ரூபமாய் வித்வான்களுக்கும், அங்வயித்த ஸ்வாமிகளுக்கும் ஸம்பாவனைகள் வழங்கப்பட்டன. ஸ்ரீ அழகிய சிங்கரின் அனுக்ரஹ விசேஷத்தால் இந்த மஹோத்ஸவம் இனிது முடிவடைந்தது.

பரவஸ்து. ஈ. ஆர். சக்ரபாணி அய்யங்கார்.

* * * *

மாலோலவித்வத் ஸதஸ்ஸின் 10-வது வார்ஷிக மஹோத்ஸவம்

மாலோல வித்வத் ஸதஸ் தை.மீ 14 வ ஸ்ரீமத் அழகியசிங்கரின் அக்ராஸநத்தின் கீழ் உபக்ரமிக்கப்பட்டது. அவ்வமயம் ஷ்ஸபையில் அங்வயிக்க எழுந்தருளியிருக்கும் வித்வான்களைப்பார்த்து ஸ்ரீ அழகியசிங்கர் 'நம் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவமென்கிற வ்யாஜத்தையிட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களை திரட்டி காணுமாப்போல நாமும் ப்ரஹ்ம வித்துக்களையும், ஆஸதிகர்களையும் காணவேண்டுமென்கிற ஆசையால் இந்த ஸபையை முதலில் ஆரம்பித்தோம். மேலும் ஸ்ரீ பாஷ்யகாரர் உகந்தருளின ஐந்து கைங்கர்யங்களில் ஸ்வாமி தேசிகன் 'ஸஞ்ஞாஷாய்ஷம் விசேஷதி உத்ஹாரர: ஸஹிர உபா்தவிஷாம்' என்று ஸாதித்தபடி இச்சபையை உபக்ரமிக்கின்றோம்' என்று ஸாதிக்க அங்கு ஸந்நிஹிதர்களான ஸ்வாமிகளெல்லாரும் அப்பொழுது நாதோபக்ஞும் ப்ரவ்ருத்தமான நம் ஸம்ப்ரதாயம் ஓங்கி வளரும்படி ஸ்ரீ அழகியசிங்கர் ஏற்பாடுசெய்தது பற்றி 'ஸஹோஹா்ஷஹோஹாஷம் நநுமோவஜ ஜனகவஸம்' என்று ஸ்ரீ க்ருஷ்ணவதாரம் போல் இல்லாமல் எல்லாருக்கும் ஸந்தோஷத்தை யுண்டுபண்ணக் கூடியதான ஸித்தாந்த ஸ்தாபனம் செய்துகொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கவேண்டுமென்று தங்களுடைய முகவிகாஸத்தால் தெரிவித்தார்கள்.

ஸ்ரீ பாஷ்யத்தில் வாக்யார்த்தம் தொடங்கி பத்து தினங்களும் இரண்டு வேளையும் மிகவும் நன்ருக நடந்தது. ராத்ரி வழக்கப்படி மஹாவித்வான்கள் தங்களுடைய உபந்யாஸத்தில் ஸரள, கம்பீர, சொற்களால் எல்லாரையும் ஸந்தோஷப்படுத்திவைத்தார்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி பாகவதாராதனமும் நிரபராதமாக நடந்தது. அதைப் பற்றி 'ஸுவோ த்ரவாஸு ஹஷ்ரம் தெ' என்று திருச்செவிக்கெட்டும்படி பாகவதர்கள் விஜ்ஞாபித்துக் கொண்டார்கள்.

திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தன்று அநேக ப்ரஹ்மவித்துக்களும் ஆஸ்திகர்களும் அஞ்ஜலி ஹஸ்தர்களாய் 'ஸூஹ்ஹாஉஸீத நெத்ராஊ: வஊஜகீக்ருத மாத்ருவாநு' என்பதுபோல் ஆசார்யகுணவிசிஷ்டர்களாய் எழுந்தருளியிருக்கும்போது 'தாந்ருஜூஷி ஸஹஸ்ராணி வந்ருஹீதாநி நாமஷெள: । ஸூகொமாநிவ வஷாநி உஉமம ஹாதாஜ: ॥' என்கிறபடி குளிரக்கடாக்ஷித்தாயிற்று. அன்று ராத்ரி டோலோத்ஸவம் ஸம்பாவனைகள் வழக்கம் போல் நன்கு நடந்து இனிது முடிந்தது.

பிறகு எழுந்தருளியிருந்த வித்வான்கள் ஸ்ரீ அழகியசிங்கருடைய அநுக்ரஹத்துடன் பலமந்த்ராக்ஷதையை பெற்றுக்கொண்டு இம்மாதிரி 'ஹஷியஸஜெஉநாய' ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்தித்தார்கள்.

இப்படிக்கு
வித்வான் தையார் மாடபூசி
ஜோ. ரங்காச்சார்யர்
ஸ்ரீகார்யம் ஸ்ரீஅஹோபிலமடம்
திருவள்ளூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பூர்வாச்ரமத்தில் பிள்ளைபாக்கம் ஸ்ரீ அழகியசிங்கர்

[ஸ்ரீவைஷ்ணவதாஸன்]

பகவானுடைய அவதாரமாகத் திருவவதாரஞ்செய்து; உலகத்தை வாழ்வித்து உய்யச்செய்தருளியவர்கள் நமது ஆசார்யர்கள். இவர்களுடைய விபவகாலங்களில் எவ்வளவோ அத்புதமான ஸம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றை நாம் குருபரம்பரையில் ஸேவித்து மகிழ்கிறோம். இன்னும் எவ்வளவோ ஸம்பவங்கள் ஓரிடத்திலும் எழுதப்படாமல் மறக்கப்பட்டுவிட்டன. இந்த நிலைமையில் நம் ஆசார்யர்களோடு நெருங்கிப்பழகிய சில பெரியோர்கள், இந்த மஹான்களுடைய ஸம்பந்தம்பெற்ற சில ரஸமான விஷயங்களைக் கூறும்போது அவற்றைக்கேட்டு நாம் பரவசமடைகிறோம். இவ்வாறு நாம் கேட்டு அறியும் விஷயங்கள் நமது உள்ளத்தில் உருசித்ரம்போல் அமைந்துவிடுகின்றன.

நமது ஸ்ரீ மடத்தில் 37-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளியிருந்த பிள்ளைபாக்கம் ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திருவஹீந்திரபுரம் எம்பெருமானிடமும், அங்கு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ தேசிகனிடமும் விசேஷமான ஈடுபாடு உண்டு. இவ்வழகிய சிங்கர் தாம் ஸ்ரீமத் ஆஸ்தானத்தை அலங்கரித்த ஸ்வல்பகாலத்தின் பெரும் பாகத்தையும் திருவஹீந்திரபுரத்தில்தான் கழித்தருளினார். அப்போது அவர் அங்குத் தாம் அநுஷ்டானங் கண்டருளிய ஸ்ரீ தேசிகன் திருமாளிகைக் கிணற்றைப்பற்றி 'ஸ்ரீமத் வேதாந்ததேசிகனால் செய்தருளப்பட்ட விரஜைக்கு நிகரான இந்தக்கிணற்றில் ஸ்நாநம் செய்கிறவன் வேதாந்தத்தில் நிஷ்ணாதன் ஆவான். இதில் ஸந்தேஹமே இல்லை' என்னுங் கருத்துடைய ச்லோகம் ஒன்று அருளிச்செய்தது மிகவும் ப்ரஸித்தம்.

தேசிக தர்சன துரந்தர ஸ்ரீ சேட்லூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்வாமி நமது ஆசார்யர்களைப் பற்றி அடியேனுக்கு அநேக ரஸமான விஷயங்கள் சொல்லுவதுண்டு. அவரிடம் ஒருநாள் அடியேன் மேலேகுறித்த ச்லோகத்தைப் பற்றிப் ப்ரஸ்தாபிக்க நேர்ந்தது. அப்போது அவர் பின்வரும் ஸம்பவத்தை அடியேனுக்குக் கூறினார்.

இப்போது சொல்லும் விஷயம் நிகழ்ந்தது ஸ்ரீ பிள்ளைப்பாக்கம் அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில். அப்போதும் அவர் திவ்யதேச ஸஞ்சாரங்கள் செய்து மகிழ்ந்ததில் குறைவில்லை. ஒருசமயம் அவர் சோழநாட்டிலுள்ள ஸ்ரீரங்கம், விண்ணாற்றங்கரை, திருக்கண்டியூர், திருக்குடந்தை முதலிய திவ்யதேசங்களை ஸேவித்துவிட்டு, ஒப்பிலியப்பனாகிய திருவிண்ணகரப்பனை ஸேவிக்கத் திருவுள்ளங்கொண்டு அந்த திவ்யதேசத்துக்கு எழுந்தருளினார். அங்கு அப்போது 'திருவஹீந்திரபுரம் ஸ்வாமி' என்றும், 'ஸ்ரீ சின்னஸ்வாமி' என்றும் ப்ரஸித்தியுடன் விளங்கிய ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன் என்னும் மஹானும் எழுந்தருளியிருந்தார். மஹான்கள் இருவர் ஸந்தித்தால் ஸல்லாபிக்கக் கேட்கவேண்டுமோ? இரண்டு திருநாமங்களும் சிலநாட்கள் ஆனந்தமாகப் பொழுதுபோக்கினார்கள். பிள்ளைபாக்கம் ஸ்வாமியும் ஒப்பிலியப்பனை ஸேவித்தாயிற்று. அவர் அடுத்தபடியாகத் தாம் ஸ்ரீதேவநாதனை ஸேவிக்க விரும்பி திருவஹீந்திரபுரத்துக்கு எழுந்தருளுவதாகக் கூறவும், உடனே ஸ்ரீசின்னஸ்வாமி அருகிலிருந்த தமது சிஷ்யர்களைக்கொண்டு திருவஹீந்திரபுரத்திலிருந்த தமது சிஷ்யராகிய சேட்லூர் ஸ்ரீநரஸிம்ஹாசார்யஸ்வாமிக்கு ஓர் ஸ்ரீமுகம் அனுப்பச்செய்தார். அப்போது சேட்லூர் ஸ்வாமிக்கு இளம் பருவம்தான். அந்த ஸ்ரீமுகத்தில் 'பிள்ளைப்பாக்கம்ஸ்வாமி ஸ்ரீதேவநாதனை ஸேவிக்கத் திருவஹீந்திரபுரம் வருகிறாரென்றும், அவர் ஒரு ஸாமா

ன்யபுருஷரல்லவென்றும், அவர் அபர தேசிகனே யென்றும், அவர் அங்கிருக்கும் நாள் வரையில் அவர் திருவுள்ளம் உகக்கும் வண்ணம் சுச்ரூஷைகள் செய்து, அவருக்கு எம்பெருமானுடையவும் ஸ்ரீதேசிகனுடையவும் ஸேவையைப் பண்ணிவைக்கவேண்டுமென்றும் நியமித்திருந்தார்.

ஸ்ரீமுகம் அனுப்பப்பட்டது ஸ்ரீநரஸிம்ஹாசார்யருக்குத் தான். ஆனல் எழுந்தருளப்போகும் பிள்ளைப்பாக்கம் ஸ்வாமியை எதிர் கொண்டழைத்து உபசரிக்கத் திருவஹீந்திரபுரமே கூடிவிட்டதாம்.

அப்போது திருவஹீந்திரபுரத்தில் கடாம்பி ஸாமி க்ருஷ்ணமாசாரியார், தர்மபுரி சடகோபாசாரியார், சேட்லூர் வித்வான் ராமாநுஜாசாரியார், தயாசதகத்துக்கு மணிப்ரவாளவ்யாக்யானம் செய்தருளிய தேவநாதாசாரியார், அஷ்டாவதானம் அநந்தாசாரியார், கைங்கரியம் ப்ரம்ஹசாரி அநந்தாசாரியஸ்வாமி முதலியவர்கள் ப்ரஸித்தர்களாக இருந்தார்கள். இவர்களெல்லாம் கூடித் தம்மை இவ்வாறு உபசரித்ததைக்கண்ட ஸ்ரீபிள்ளைப்பாக்கம் ஸ்வாமியின் மனேபாவத்தை நாம் ஊஹித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஸ்ரீ அஹோபிலமடத்தின் முக்கியமான கிளைமடங்களில் திருவஹீந்திரபுரம் மடமும் ஒன்று. அங்குத்தான் ஸ்ரீபிள்ளைப்பாக்கம் ஸ்வாமி எழுந்தருளியிருந்தார். அங்கு அவர் அப்போது சில நாட்கள்தான் இருக்கும்படியிருந்தது. அவர் திருவுள்ளப்படியே இளைஞரான ஸ்ரீசேட்லூர் நரஸிம்ஹாசார்யஸ்வாமி அவரை ஸ்ரீதேசிகன் திருமாளிகைக்கு அழைத்துச்சென்று, அங்கு அந்தத் திருமாளிசையின் ஸந்நிவேசத்தையும் அங்கு ஸ்ரீதேசிகன் எழுந்தருளியிருந்த மண்டபத்தையும், அங்குள்ள ஸ்ரீதேசிகனே நிர்மாணம் செய்தருளிய திருக்கிணற்றையும் காட்டியருளினர். அவற்றைக் கண்ட மாத்திரத்திலேயே அவையெல்லாம் ஸ்ரீஸ்வாமியின் திருவுள்ளத்துக்கு மிகவும் பிடித்துவிட்டன. எனவே அவர் அங்கிருந்த ஏழெட்டு தினங்களும் அந்தத் திருக்கிணற்றிலேயே அநுஷ்டானங்களைச் செய்தருளி, ஸ்ரீதேசிகன் எழுந்தருளியிருந்த மண்டபத்துக்கெதிரிலேயே க்ரந்தகாலக்ஷேபங்களையும் செய்தருளினர். இந்த மண்டபம் அப்போது மிகவும் ஜீர்ணமான நிலையில்தான் இருந்தது. ஸ்ரீஸ்வாமி பிற்காலம் தான் ஆஸ்தானத்துக்கு எழுந்தருளியவுடனே தமது முதல் காரியமாகச் செய்தருளியது இந்த மண்டபத்தை த்ருடமாகக் கட்டியருளியதுதான். தமது சிஷ்யரும் பிறகு ஸ்ரீதிருக்குடந்தை அழகியசிங்கரென்று ப்ரஸித்தியடையப்போகிறவருமான ஸ்ரீகதாதரபுரம் சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமியைக் கொண்டு அஸ்திவாரக்கல் நாட்டச்செய்து, மண்டபத்தில் கொஞ்சம்கூட மாறுதலேயில்லாமல் இவர் த்ருடமாகக்கட்டச்செய்த இந்த மண்டபம் இன்று கண் கொள்ளாத காட்சியாகத்தான் ஸேவையளிக்கிறது.

இது நிற்க, ஸ்ரீதேவநாதனையும் ஸ்ரீதேசிகனையும் ஸேவிக்கும் குதூகலத்துடன் திருவஹீந்திரபுரத்துக்கு எழுந்தருளியவரல்லவா ஸ்ரீபிள்ளைப்பாக்கம் ஸ்வாமி! அவரை ஸ்ரீசேட்லூர் நரஸிம்ஹாசாரியர்ஸ்வாமி, அந்த திவ்யதேசத்து ஆராதகரான நம்பியைக் கொண்டு எம்பெருமானையும் ஸ்ரீதேசிகனையும் ஸேவிக்கப்பண்ணிவைக்க, அவரும் இத்திருநாமங்களை மங்களாசாஸனம்பண்ணி மகிழ்ந்தருளினர். இந்த மங்களாசாஸனத்தின் போது தமக்குண்டான அநுபவங்களை ஸ்ரீபிள்ளைப்பாக்கம் ஸ்வாமி அழகான ச்லோகங்களால் சித்தரித்துத்தந்துள்ளார்.

திருவஹீந்திரபுரத்தில் எம்பெருமானுக்குக் கைங்கரியம் பண்ணுவதில் அத்யாபகர்களுக்கும் வேதபாராயணக்காரர்களுக்கும் எப்போதுமே போட்டியுண்டு. ஆனல் அவர்கள் ஸ்ரீபிள்ளைப்பாக்கம் ஸ்வாமியை உபசரிப்பதில் தங்கள் போட்டிகளையெல்லாம் மறந்துவிட்டனராம்.

இவ்வாறு சில நாட்கள் அங்கிருந்துவிட்டு ஸ்ரீஸ்வாமி மறுபடியும் திவ்யதேசயாத்திரையிற் கிளம்பியருளிவிட்டாராம். அவர் மறுபடியும் திருவஹீந்திரபுரத்துக்கு எழுந்தருளியது தமக்கு ஆஸ்தாநநிர்வாஹம்

ஏற்பட்டபிறகுதான். அப்படி எழுந்தருளிய போது நிகழ்ந்த ரஸமான விஷயங்கள் பலவுண்டு.

நிற்க சிறிதுகாலம் மற்றத் திவ்யதேசங்களுக்கு யாத்திரை செய்தபின்பு ஸ்ரீபிள்ளைப்பாக்கம் ஸ்வாமி மறுபடியும் ஸ்ரீஒப்பிலியப்பன் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு மறுபடியும் அவருக்கும் ஸ்ரீசின்னஸ்வாமிக்கும் ஸம்பாஷணமும் உண்டாயிற்று.

அப்போது ஸம்பாஷணை க்ரமத்தில் ஸ்ரீசின்னஸ்வாமி சிரித்துக்கொண்டு, 'தேவரீர் திருவஹீந்திரபுரம் எழுந்தருளிற்றா? அங்கு எம்பெருமானையும் ஸ்ரீ தேசிகனையும் மங்களாசாஸனம் செய்தாயிற்றா? அதைப்பற்றி தேவரீர் திருவுள்ளம் என்ன?' என்று கேட்டாராம். உடனே ஸ்ரீ பிள்ளைப்பாக்கம் ஸ்வாமி பரவசமாகி, 'அடியேன் வேறு என்ன சொல்வதற்கு இருக்கிறது? திருவஹீந்திரபுரம் ஸாக்ஷாத் பரமபதமேதான். அங்கு ஸ்ரீதேசிகன் திருமாளிகையிலுள்ள அந்தக் கிணறு ஸாக்ஷாத் விரஜையேதான். அந்தத் திருமண்டபந்தான் பரமபதத்திலுள்ள ஸஹஸ்ரஸ்தூணமண்டபம். அங்கு அடியேன் காலக்ஷேபம் செய்து ஆநந்தித்தமேத பரப்ரஹ்மாநந்தம். இதுதான் அடியேன் அபிப்ராயம்,' என்று அருளிச்செய்தாராம். உடனே ஸ்ரீசின்னஸ்வாமி மிகவும் திருவுள்ளமுகந்து, 'பெரிய கவியாகிய தேவரீர் இப்போது ஸாதித்த அர்த்தத்தைத் தேவரீருடைய திருவாக்காலேயே ஒரு ச்லோகமாக அருளிச்செய்யவேண்டும்' என்று கூறவும் உடனே ஸ்ரீ ஸ்வாமியும் அந்த அர்த்தத்தை ஒரு ச்லோகரூபமாக அருளிச் செய்துவிட்டார்.

'சொல்லும்' என்றுகேட்டு வாய் மூடும் முன்பு, 'சொல்லுகிறேன் எழுதிக்கொள்ளும்' என்பார்போன்று ச்லோகத்தை ஒப்பித்த ஸ்வாமியின் ப்ரபாவம் எல்லாரையும் ஆச்சர்யப் படுத்திவிட்டது. உடனே அங்கிருந்த ஒரு கைங்கர்யபரர் அந்தச்லோகத்தை அப்படியே அந்த படத்தின் சுவற்றில் எழுதி வைத்தாராம்.

இந்த அத்புதமான ச்லோகம் ஸ்ரீ தேசிகன் திருமாளிகையின் கிணற்றுக்கருகிலுள்ள சுவற்றின்மேல் இன்னும் எழுதப்பட்டு விளங்குகிறதாம். இதை ஒரு கல்லில் செதுக்கி அங்கு பதிப்பிக்க வேண்டும் என்று சிலர் ஆசைப்படுகிறார்களாம். ஆனால் அது ஸேவிக்கும் எல்லோருடைய மனத்திலும் கல்வெட்டையும் சிலாசாஸனத்தையும் காட்டிலும் த்ருடமாகப் பதிந்து எப்போதும் ஆநந்தத்தைக் கொடுத்து வருகிறது என்பதில் ஸந்தேஹமில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸதுபதேசம்

[ஸ்ரீ. உப. அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், முக்கூர்- ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி.
ஸ்ரீ அஹோபிலமடம்- திருவள்ளூர்.]

ஒரு ஆசார்யன் தன் திருவடிகளில் வணங்கி விநயத்தோடு கைகூப்பி நிற்கும் சிஷ்யனைப்பார்த்து, ஆசீர்வாதம் செய்து, கவலை வேண்டாம்; என்ன விஷயம் தெரிந்துகொள்ளவேண்டுமானாலும் கேள்; உனக்கு நான் அன்புடன் சொல்கிறேன் என்று சொன்னார்.

சிஷ்யன்— ஸ்வாமின்! ஒரு மஹானைச் சந்தித்தேன். அவரை வணங்கி, நீர் யார்? என்று கேட்டேன். அந்த மஹான் புன்சிரிப்புடன் என்னைப்பார்த்து நீர் யார் என்று கேட்கிறாயே? உன்னை நீ தெரிந்துகொண்டாயா? உன்னை நீ நன்றாக தெரிந்துகொண்டால் என்னையும் நீயே தெரிந்து

கொண்டுவிடுவாய்' என்று சொல்லிவிட்டு வேகமாகப் போய் விட்டார். அது முதல் என்னை நான் தெரிந்துகொள்ள தங்களை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தேன். அநுக்ரஹம் செய்யவேண்டும். நான் என்பது யார்? ஸ்வாமின்! சொல்லவேண்டும்; என்று கேட்டான்.

ஆசார்யன்— சிஷ்யனைப்பார்த்து நான் என்பதற்கு பொருள் நீ தெரிந்துகொண்டு இருக்கிறவரையில் சொல். பிறகு அதில் பிசகு இருந்தால் சொல்லுகிறேன், என்று சொன்னார்.

சிஷ்யன்— ஸ்வாமின்! ஒரு பெரியவரை வணங்கி அவர் பாதங்களைப் பிடிக்கப்போனேன். அந்தப் பெரியவர் என்னைத் தொடாதே என்று சொன்னார். மற்றொரு பெரியவர் அவ்விடம் வந்து சேர்ந்தார். கோயிலில் எனக்கு மாலை போட்டார்கள் என்று சொன்னார். இம்மாதிரி அநேகம் பெரியோர்களுடைய வார்த்தைகளைக் கேட்டதிலிருந்து 'நான்' என்பதற்குப் பொருள் 'இந்த உடல்தான்' என்று நிச்சயமாய் நினைத்துக்கொண்டு இருக்கிறேன் என்று சொன்னான்.

ஆசார்யன்— 'நான்' என்பதற்குப் பொருள் உடல் அல்ல. உடலுக்கு உள்ளே 'ஆத்மா' என்று ஒரு வஸ்து இருக்கிறது. அந்த வஸ்துதான் 'நான்' என்கிற பொருள். அதற்குக் காரணம் சொல்லுகிறேன். கவனித்துக் கேள். ஒருவன் ஒரு மோதிரத்தைக்காட்டி இது என்னுடைய மோதிரம் என்று சொல்கிறான். அந்த இடத்தில் மோதிரம் வேறு ஆகவும் என்னுடைய என்கிறவன் வேறாகவும் காணப்படுகிறதுகள் அல்லவா? அதுபோல் லோகத்தில் படித்தவர்கள் படிப்பில்லாதவர்கள் எல்லோரும் என்னுடைய உடல், என்னுடைய சரீரம், என்னுடைய உடம்பு என்றும் சொல்லுவது உனக்கும் தெரியுமல்லவா? நீயும் என்னுடைய உடல் என்றுதானே சொல்லுகிறாய். இந்த இடத்தில் யோசித்துப் பார். என்னுடைய மோதிரம் என்கிற இடத்தில் எப்படி என்னுடைய என்பதற்கு ஒரு வஸ்துவும் மோதிரம் என்பதற்கு மற்றொரு வஸ்துவும் காணப்படுகிறதுகளோ, அப்படியே என்னுடையை உடல் என்கிற இடத்திலும் உடல் என்பதற்கு ஒரு வஸ்துவும், என்னுடைய என்பதற்கு மற்றொரு வஸ்துவும் இருக்கின்றது என்று ஒத்துக்கொள்ளவேண்டுமல்லவா?

சிஷ்யன்— ஸந்தேஹம் என்ன? ஸ்வாமின்! கட்டாயம் இரண்டு வஸ்துக்கள் இருக்கவேண்டுமென்று ஒத்துக்கொள்ளவேண்டியதுதான்.

ஆசார்யன்— நீ மிகவும் புத்திசாலி என்பதில் ஸந்தேஹமில்லை. அந்த இரண்டு வஸ்துக்களில், உடல் என்பதற்குப் பொருள் நேரில் காணக்கூடிய நம்முடைய உடம்பு தானே?

சிஷ்டன்— ஆமாம் ஸ்வாமின்!

ஆசார்யன்— என்னுடைய என்பதற்கு பொருள் என்ன? தெரிகிறதா?

சிஷ்யன்— தெரியவில்லை.

ஆசார்யன்— என்னுடயு என்பதற்கு கட்டாயம் ஒரு பொருள் இருக்கவேண்டுமல்லவா?

சிஷ்டன்— கட்டாயம் இருக்கவேண்டும் என்றுதான் ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த வஸ்து எது? அது எவ்விடத்திலிருக்கிறது?

ஆசார்யன்— அந்த வஸ்து உடலுக்குள்ளே இருக்கிறது. அதற்குத்தான் 'ஆத்மா' என்று பெயர். அந்த ஆத்மா தான் என்னுடைய என்பதற்குப் பொருள். 'நான்' என்பதும் அந்த ஆத்மாதான். ஆகையால், 'நான்' என்பதற்குப் பொருள் உடல் அல்ல. 'நான்' என்பது உடலுக்கு உள்ளே இருக்கிற ஆத்மாதான்.

சிஷ்யன்— ஆத்மா என்பது உடலுக்குள்ளே இருக்கிற ஒரு வஸ்து என்று தங்களுடைய உபதேசத்தால் தெளிவாகத் தெரிந்துகொண்டேன். உடல் தாய் வயிற்றிலிருந்து உண்டாகி அழிந்துவிடுகிறதல்லவா? அதுபோல் உடலுக்குள்ளேயிருக்கிற ஆத்மாவும் அந்த உடலோடுகூட உண்டாகி

உடல் அழிகிற ஸமயத்தில் அழிந்துவிடக் கூடியது தானே?

ஆசார்யன் — 'நான்' என்று சொல்லப்படுகிற ஆத்மாவானது உண்டாகிறதில்லை; அழிகிறதுமில்லை. உடல்தான் உண்டாகிறது. அழிகிறது.

சிஷ்யன் — 'கோபாலன், ரங்கநாதன்,' என்று பெயர் வைக்கின்றார்களே அது உடலுக்கா? அல்லது ஆத்மாவுக்கா?

ஆசார்யன் — தனி ஆத்மாவிற்கும் அந்த பெயரில்லை. தனி உடலுக்கும் அந்த பெயரில்லை. ஆத்மாவோடு கூடின உடலுக்குப் பெயர் வைத்து கூப்பிடுகிறார்கள். அந்த பெயர் உடலுக்குள்ளிருக்கிற ஆத்மாவையும் சொல்லுகிறது என்று வேதாந்திகள் சொல்லுகின்றார்கள்.

சிஷ்யன் — ஸ்வாமிந்! ஒரு ஸந்தேஹம். கோபாலஸாமி பிறந்து பத்து வருஷம் ஆகிறது என்று சொல்லுகிறார்களே அந்தயிடத்தில் உடலோடு கூடின கோபாலஸாமி என்கிற ஆத்மா பிறந்தான் என்றுதானே சொல்லவேண்டும். அதைப்போல கோவிந்தஸாமி இறந்தான் என்று சொல்லுகிறார்களே அந்தயிடத்தில் உடலோடு கூடின கோவிந்தஸாமி என்கிற ஆத்மா இறந்தான் என்றுதானே சொல்லவேண்டும். இவைகளைப் பார்த்தால் ஆத்மாவுக்கும் பிறப்பு, அழிவு இரண்டுமுண்டு என்றுதானே தோன்றுகிறது.

ஆசார்யன் — பெரியதான கேள்விதான்; ஸமாதானம் சொல்லுகிறேன் கவனித்துக் கேள். நேரில் அறியமுடியாத விஷயங்களை உபதேசிப்பதற்கு யுக்திமாத்திரம் போதாது. ஶாஸ்த்ரங்களால் தான் அறியவேண்டும். அதற்குமேல் யுக்திகளை உபயோகப்படுத்துவதுதான் ஆஸ்திகர்களின் கடமை. ஆகையால் ஆத்மாவைப்பற்றி ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறபடி சொல்லுகிறேன் கேள். கீதையில் 'ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித் நாயம் பூத்வா பவிதா வா ந பூய: அஜோ நித்யச்சாச்வதோऽயம் புராண: ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே' என்று கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்த 2-வது அத்யாயம் 20-வது ச்லோகத்தினால் ஆத்மா பிறக்கிறதில்லை என்றும், ஆத்மா அழிகிறதில்லை என்றும், எந்த காலத்திலும் ஒரேவிதமாக இருக்கிறான் என்றும், உடல்அழிக்கப்பட்டாலும் ஆத்மா அழிக்கப்படுகிறதில்லை என்றும் நிச்சயமாக தெரிகிறபடியால் ஆத்மாஉண்டாகிறதில்லை நசிக்கிறதில்லை என்று உனக்கு நான் சொன்னேன். இப்பொழுதுயோசித்துப்பார். கோபாலஸாமி பிறந்தான் என்றால் எப்படி சொன்னால் பொருந்தும். தாயின்வயிற்றிலிருந்து உண்டாகும் உடலோடுசேர்ந்து கோபாலஸாமி என்கிற ஆத்மா வந்தான் என்றுதானே சொல்லவேண்டும். கோவிந்தஸாமி இறந்தான் என்றால் கோவிந்தஸாமி என்கிறசரீரத்தை விட்டு ஆத்மா பிரிந்துவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும். இவ்விடத்தில் பிறந்ததும் அழிந்ததும் உடலேயொழிய ஆத்மாவல்ல என்று தெரிந்துகொள்.

கீதையில் இரண்டாவது அத்தியாயம் 22-வது ச்லோகத்தைப் பார்.

'வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி । ததா சரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ' ॥

[ஒரு மனிதன் உடுத்திக்கொண்டிருக்கிற பழயதான வஸ்த்ரங்களை விட்டுவிட்டு புதிய வஸ்த்ரங்களை உடுத்திக்கொள்வதுபோல் இந்த சரீரத்தோடு கூடின ஆத்மா இந்த சரீரத்தை விட்டுப் புதியதான வேறு சரீரத்தையடைகிறான்.] என்று இருக்கிறபடியால் ஒருவன் இறந்தான் என்றால் சரீரத்தை விட்டுப் பிரிவதுதான், ஒருவன் பிறந்தான் என்றால் புதிய சரீரத்தோடு தோன்றுவதுதான்.

சிஷ்யன் — லோகத்தில் பார்ப்பது கண்ணால்; கேட்பது காதினால்; பேசுவது வாக்கினால்; வாஸனை அறிவது மூக்கினால்; ருசி அறிவது நாக்கினால்; என்பவை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கண், காது, மூக்கு, நாக்கு முதலியவைகள் சேர்ந்த ஒரு வஸ்துவுக்குத்தானே உடல் (சரீரம்) என்று

பெயர். அறியுந்தன்மை சரீரத்திற்குத் தானே இருக்கிறது. ஆகையினுல் அறிவுள்ளது சரீரம் என்று தோன்றுகின்றது உடலுக்குள்ளே இருக்கிற ஆத்மா அறிவில்லாத ஒரு பொருள் என்று தானே நாங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஆசார்யன் — (சிரித்துக்கொண்டு) உனக்கு நல்லகாலம் வந்துவிட்டது. அவஸரப்பட்டு நீயாகவே தீர்மானம் செய்துவிடாதே. கேள்வை மாத்திரம் கேள், தீர்மானத்தை நான் சொல்லுகிறேன். ஒரு ஆத்மா உடலிலிருந்து பிரிந்துபோனபிறகு அந்த உடலில் கண், காது, நாக்கு இவை முதலியவைகள் இருப்பதாக உனக்குத் தெரிகிறதா? இல்லையா?

சிஷ்யன் — நன்ருகத் தெரிகிறது.

ஆசார்யன் — அப்பொழுது அந்த உடல் எந்த தாய் வயிற்றிலிருந்து உண்டாச்சுதோ அந்த தாய் அந்த உடலைப் பார்த்து என்னைப் பார்த்து எழுந்திருந்து வா என்னேடு ஒரு வார்த்தைச் சொல் என்று எவ்வளவு கதறி அழுதாலும் திரும்பிப்பார்க்கிறதா? எழுந்து வருகிறதா? பதிலாவது சொல்லுகிறதா? காரணம் என்ன சொல். உடல்தான் அறிவுள்ளது என்று தீர்மானம் செய்துவிட்டாயே. இப்போது என்ன சொல்லப்போகின்ருய்.

சிஷ்யன் — (ஒன்றும் சொல்லமுடியாமல் வெட்கமடைந்து, நாம் செய்கிற யுக்திகள் ப்ரயோஜநப்படாது ஆசார்யனைக் கேட்டே தெரிந்து கொள்ளவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு,) ஸ்வாமின்! க்ஷமிக்கவேணும். இப்பொழுது தேவரீர் கேட்ட கேள்வையை யோசித்துப் பார்த்தால் அறிவு என்பது உடலுக்கு அடியோடு இல்லை என்று நன்ருகத்தோன்றுகிறது. கொளுத்தினுல்கூட உடலுக்கு ஒன்றும் தெரியவில்லையே? ஆகையால் பார்ப்பது, பேசுவது, நடப்பது முதலான கார்யங்களைச் செய்யக் கூடியதான அறிவு (புத்தி) யாருக்கு? நன்ருகத் தெரிந்துகொள்ளும்படி சொல்ல வேண்டும்.

ஆசா — ஸகல விஷயங்களையும் தெரிந்து கொள்ளுவதும் அந்தந்த விஷயங்களை அடைந்து அனுபவிப்பதற்கு வேண்டிய கார்யங்களைச் செய்வதும் ஆத்மாதான் அவனுக்குச் சேதனன் என்றும் ஓர் பெயர் உண்டு. சேதனன் என்ருல் ஜ்ஞாநமுடையவன் என்று அர்த்தம். அறிவாளி என்றும் சொல்லுவார்கள். உடலுக்குள்ளேயிருக்கிற இந்த அறிவுள்ள ஆத்மா உடலுக்கு வெளியில் இருக்கிற வஸ்துக்களை எப்படித் தெரிந்துகொள்ளுகிருன்? என்றுதானே உனக்கு ஸந்தேஹம் உண்டாகின்றது. சொல்லுகின்றேன் கவனித்துக் கேள்.

ஆத்மாவுக்கு இருக்கிற அறிவுக்கு ஜ்ஞாநம் என்று பெயர். அதை புத்தி என்றும் சொல்லுவார்கள். இந்த ஜ்ஞாநமானது ஆத்மாவை விட்டு எப்பொழுதும் பிரியாத ஒரு வஸ்து. அந்த ஜ்ஞாநமாநது சில ஸமயத்தில் மிகவும் பெரியதாய் விளங்கும். சில ஸமயத்தில் மிகவும் சிறியதாகவும் ஆகும். நடுத்தரமாகவும் சில ஸமயத்திலிருக்கும். இதுவரைக்கும் நன்ருக மனத்தில் வைத்துக்கொள்ளு. இந்த சரீரம் ஒருவனுல் உண்டுபண்ணப்பட்டதேயொழிய தானுக உண்டானது இல்லை. இதையும் நிச்சயமாக தெரிந்துகொள்ளு. இதைப்பற்றி உனக்கு கேட்கவேண்டுமென்ற எண்ணமிருந்தால் பிறகு கேள். இந்த உடலில் பதினேரு கருவிகள் அமைந்திருக்கின்றதுகள். அவைகளுக்கு இந்த்ரியங்கள் என்று பெயர். கண் என்று ஒரு இந்த்ரியம். இப்பொழுது நம் உடலில் கண்கள் என்று சொல்லுகிருேமே, அந்த கண்கள் கருவிழிக்குள் அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த கண் என்கிற இந்த்ரியம் நம்மால் பார்க்கமுடியாத அவ்வளவு சின்னதான ஒரு வஸ்து. ஆத்மா என்பவன் இந்த உடலில் மார்பு பாகத்தில் ஹ்ருதயம் என்று சொல்லுகிற இடத்தில்தான் இருக்கின்ருன். அவனை விட்டுப் பிரியாமல் ஜ்ஞாநம் என்று ஒரு வஸ்து இருக்கின்றது என்று சொன்னேமே அந்த ஜ்ஞாநமாநது ஒரு உள்ளே வைக்கப்பட்டிருக்கிற தீபத்தினுடைய வெளிச்சமானது எப்படி அந்த உள்

முழுவதும் பரவுமோ அதுபோல இந்த உடலில் எங்கும் பரவியிருக்கிறது. தீபம் வைத்திருக்கிற உள்ளுக்கு ஜன்னல் இருந்தால் அந்த வழியாய் தீபத்தினுடைய ஒளி வெளியில் வருவதுபோல் இந்த உடலில் கண் என்கிற ஒரு ஜன்னல் வழியாக ஆத்மாவிற்கு ஒளிபோல் இருக்கிறதாயும் உடலுக்குள்ளே பரவியிருக்கிறதாயும் உள்ள ஜ்ஞானமானது (அறிவானது) உடலுக்கு வெளியிலேயும் பரவி அங்குள்ள வஸ்துக்கள் மேலேயும் பரவுகிறது எது தெரிந்ததா? ஆத்மாவை விட்டுப் பிரியாததாய் ஆத்மாவுக்கு ஒளிபோல் உள்ளதாய் பெரியதாய் பரவக்கூடியதாய் சிறியதாகவும் ஆகக்கூடியதாயும் இருக்கிற அறிவு. உடலில் இருக்கும் ஜன்னல்போல் உள்ள கண்வழியே வெளியிலேயும் பரவி வெளியில் உள்ள வஸ்துக்களிடத்திலும் பரவின உடனே இது யானை, இது பசு, இவன் மநுஷ்யன் என்று ஆத்மா தெரிந்துகொள்ளுகிறான். ஒரு த்ருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள். ஒரு தந்திக்கம்பிடானது வெளியூர்களில் தன்னிடத்தில் ஸம்பந்தப்பட்ட விஷயங்களை தனக்குள்ளே வாங்கிக்கொண்டு வேறு போஸ்டாபீஸில் உள்ள தன் ஸம்பந்தமுள்ளவனுக்கு தெரிவிப்பதுபோல் ஆத்மாவினிடத்தில் ஸம்பந்தம் பெற்றிருக்கிற ஜ்ஞானமும் கண் என்று சொல்லுகிற இந்த்ரியம் வழியாக வெளியில் போய் அங்கு எந்த வஸ்துவேடிருக்கிறதோ அந்த வஸ்துவை ஆத்மாவிற்கு தெரியப்படுத்துகிறது. அப்போதுதான் யானை முதலியவைகளைப் பார்க்கிறான் என்று சொல்கிறார்கள். ஆகையால் பார்க்கிறவன் ஆத்மாவென்று தெரிந்துகொள்.

'காது' என்பது நாமெல்லோரும் காது என்று ஒரு இடத்தைச் சொல்லுகிறோமே அதனுள்ளே இருக்கிற மிகவும் சிறியதான ஓர் வஸ்து. ஆத்மாவானவன் தன்னிடத்தில் பிரியாமல் இருக்கிற ஜ்ஞானத்தை காது என்கிற இந்த்ரியத்தின் வழியாக வெளியில் பரவச்செய்து, அதன்மூலமாகச் சப்தங்களை அறிகிறான். ஆகையால் காது என்கிற இந்த்ரியத்தின் வழியாக சப்தங்களை அறிகிறவனும் ஆத்மாதான்.

'மூக்கு' என்று ஒரு இந்த்ரியம். அதுவும் மிகவும் சிறியது. இப்போது சொல்லிவரும் மூக்கின் நுனியில் அந்த இந்த்ரியம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதனால்தான் ஆத்மா வாஸனையை அறிந்து கொள்கிறான்.

'நாக்கு' என்னும் இந்த்ரியமும் மிகவும் சிறியது. நாம் சொல்லும் நாக்கின் நுனியிலிருக்கிறது. அந்த இந்த்ரியத்துடன் ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களின் ருசியை ஆத்மாதான் அறிகிறான்.

'த்வக்' என்பது சரீரத்தில் எல்லாயிடங்களிலும் ஸஞ்சரிக்கக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத ஒரு வஸ்து. இதனால் உஷ்ணம், சீதம், கடினம் முதலியவைகளை ஆத்மா அறிகிறான். கீழ்ச்சொன்ன ஐந்து இந்த்ரியங்களுக்கும் ஜ்ஞானேந்த்ரியங்கள் என்று பெயர். அதாவது— ஆத்மா உடலுக்கு வெளியிலுள்ள விஷயங்களை அறிந்துகொள்வதற்கு உதவி செய்கிறபடியால் ஜ்ஞானேந்த்ரியங்கள் என்று பெயர்.

'கை' என்று ஒரு இந்த்ரியம் நம்முடலிலுள்ள கைகளுக்குள்ளே இருக்கிற ஒரு சிறிய இந்த்ரியர். இதன் சக்தியால் உடலுள்ளவன் அர்ச்சனை செய்கிறான். அஞ்ஜலி செய்கிறான். இதைப்போல் கால் என்பதும் ஒரு சிறிய இந்த்ரியம். அதனால் ஆத்மா நடக்கிறான்.

'வாக்' என்பது வாயிலுள்ள ஓர் சிறிய இந்த்ரியம். இந்த இந்த்ரியத்தினால் ஆத்மா சாப்பிடுகிறான்; பேசுகிறான்.

'பாயு' என்று ஒரு சிறிய இந்த்ரியம். இது மலத்தைக் கழிக்கக்கூடிய இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது அதன் சக்தியால் ஆத்மா உடலிலுள்ள மலத்தைக் கழிக்கிறான்.

'உபஸ்தம்' என்று ஒரு இந்த்ரியம் மூத்ரம் விடுகிற இடத்திலிருக்கிறது. அதன் மூலம் ஆத்மா சரீரத்திலுள்ள மூத்ரத்தைக் கழிக்கிறான்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின்

ஆச்ரம ஸ்வீகாரம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் செய்யப்பட்டுவரும் கார்யங்கள் ஒவ்வொன்றும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் உகக்கும்படியாயும், 'வைஶாகவாயந ஸல நக்ஷத்ரதய: ஶ்ரேஷ்டாஶ்ரம: க்ஷிதிப:' என்றபடி நடந்துவருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதில் இப்பொழுது தைமீ 27உ (9-2-51) 43-வது பட்டத்திற்கு ஸ்ரீ அழகியசிங்கரை நியமித்தது ஒன்று. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தன்னை இரண்டு அழகியசிங்கர்களாக திருவாராதனம் பண்ணவேண்டுமென்று ஸ்ரீ அழகியசிங்கர்மூலமாக திருவுள்ளம்பத்தி, ஸ்ரீ தேசிகன்—'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியமநகம் ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ஸத்த்வஸ்தம் ஸத்யவாசம் ஸமயநியதயா ஸாதுவ்ருத்த்யா ஸமேதம் । டம்பாஸூயாதிமுக்தம் ஜிதவிஷயகணம் தீர்கபந்தும் தயாளும் ஸ்காலித்யே ஶாஸிதாரம் ஸ்வபரஹிதபரம் தேஶிகம் பூஷ்ணுரீப்ஸேத்' ॥ என்று ஸாதித்தபடி ஆசார்ய லக்ஷணங்களோடு கூடியும் பண்டித பாமைகாந்தியராயும், கர்ப்பஸ்ரீமானாயும் எழுந்தருளியிருக்கும் ஆஸ்தானவித்வான் ஸ்ரீ தேவனார்விளாகம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமிக்கு பண்டிதர்களுடையவும் ஆஸ்திகர்களுடையவும் முன்னிலையில் ஸ்ரீ அழகியசிங்கர் 'ஸஹோவாச ஸ்ரீந்ருஸிம்ஹ: வைஷ்ணவம் ஸ்வயம்வ்ருத: । யோ மாம் வைஷ்ணவே' என்னும்படி ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 'ப்ரைஷோச்சாரணம்' செய்து காஷாயம் கொடுத்தது இருந்தது. ஸ்ரீ ஆதிவண்சடகோப மஹாதேசிகனுக்கு இந்தப்படி தான் நடந்திருக்கவேண்டும் என்று ஸகலரும் சொல்லி மகிழ்ந்தார்கள். தொன்றுதொட்டு அவிச்சின்ந ஸம்ப்ரதாயமாக வருவதைப்பற்றி பேசாதாரில்லை. இது சிஷ்யர்களுடைய பாக்யவிசேஷமே. ஸ்தானத்தின் மஹிமையும் ஆகும். பகவானால் ஆரம்பிக்கப்பட்டதாகையால் ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே செய்துகொண்டான் என்றால் மிகையாகாது.

ஸ்ரீ சின்ன அழகியசிங்கருக்கு 'ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகன்' என்று திருநாமம் சூட்டியாயிற்று. பிறகு வஸந்தோத்ஸவ தோட்டத்திலுள்ள கிணற்றில் அவப்ருத நீராட்டம் செய்துகொண்டு ஸ்ரீ ஸந்நிதிக்கு சத்ர சாமரம் முதலியவைகளுடனும் சிஷ்யர்கள் யதிராஜ ஸப்ததி சொல்லிக்கொண்டு பின்வர ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்தவர்கள் 'கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்று சொல்லிக் கொண்டார்கள். பிறகு இஜ்யாகால மங்களஹாரத்தி ப்ராசீநமாக இருக்கும் 'ஹம்ஸமுத்ரையை' சாத்திக்கொண்டு செய்தாயிற்று. அருளப்பாடிட்டுத் தீர்த்தம் ஸ்வீகரித்தவுடன் சிஷ்யர்கள் தனியன் அநுஸந்தாநம் செய்தார்கள். ராத்ரி டோலோத்ஸவத்தில் அருளப்பாடுடன் இரண்டு அழகியசிங்கர்களுக்கும் மாலை மரியாதைகள் நடந்தன. ஸேவித்தவர்கள் 'க்ருதார்த்தோஸ்மி ஜந்ம ஸாபல்யம் ஜாதம் நாத' என்றார்கள்.

திருவள்ளூர்.
12-2-51.

இப்படிக்கு
தையார். மாடபூசி. வித்வான்
ஜோ. ரங்காசார்யர் ஸ்ரீகார்யம்.

ஸ்ரீ:

श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः

श्रीलक्ष्मीनृसिंह सुप्रभातम्

[ஸ்ரீ. உப். நாவல்பாக்கம் வரதாசார்யர், திருச்சேறை.]

वन्देऽरविन्दसदने चरणारविन्दं भूतार्भकाश्रितवताममलं भवत्याः।
यन्नन्दनेन विबुधाः पदभक्तिभाज्याः प्राप्ताः स्वसम्पदमयि स्वदयिते दयार्द्रे॥

1 स्वामिन्नशेष सकलश्रुतिवाग्गणेय हंसद्वयाय यशसे नमतां नमोऽस्तु।
उत्तिष्ठ पाहि भगवन्! शरणागतेनोऽस्मान् लक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

2 श्रीमन्नगेश गजराजविमोहनाशायि नु श्रीवत्सलाञ्छितवक्षा बलजयोऽनिरुद्ध।
त्वत्कारणं विततावरणायिरामं नः लक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

3 कृपायते जय जय सदृशो निहतो राजा जयीव च भवतां प्रतिपक्षपक्षः।
तेजोनिधिर्भुवनस्थितं विलम्बं करोति लक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

4 जातास्तथा कमलिनी स्वविरं विकासमुत्थाय सद्यः प्रियतमं रविबालजाक्ष।
दृष्ट्वा ससम्भ्रमुपस्थिता सा श्रीः सतीव लक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

5 मन्दं प्रयाति पवनोऽपि च गन्धवाही स्नातुं जनाय सलिलेऽवगाह्य बालजलजानाम्।
शीतस्पर्शं सम्प्रवहते श्रीतवाङ्घ्रिजात लक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

6 श्रीनाथ पारमेश्वर यामुनवेदशीर्षप्रद्युम्नादिवर्णसञ्जीवादिगम्यरूपवेदैः।
नित्यं समीक्षितवपुर्भवारूढ श्रीलक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

7 यातास्त्रिशीर्षस्वरनाभिवांश्च देवा महादेवमिन्द्रमुखाः सहसैव जीवाः।
पाहि प्रसीद परमात्म विलोकयस्व लक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

8 उन्निद्रपङ्कजविलोचन योगवन्द्यः कारुण्यपूरहृदये तव लिङ्गयान्तु।
त्वत्पादनेन शरणं समुपेत्य लभन्ताम् लक्ष्मीपते नरहरे तव सुप्रभातम्॥

9 प्रह्लादपारगमनाक्षिताय वरप्रियतनोः प्रियतमं वरद! कथीयाः।
श्रोता स सा विहारतस्त्प्रणतेषु नाथेषु भक्तिं हि नरहरे तव सुप्रभातम्॥

10 कल्याणलक्षणकलाकलापवते कमले निलये कमले! कृपार्द्रतनुः।
नानावेष वसतां समीरयन्तः संस्तुत्य तानि चरितानि मनोहराणि॥

11 सन्तं स नृपमवेक्ष्य सदा च पोषयितुं प्रादुर्बभूव भगवान् दयानाः।

𑌗𑍁𑌰𑌾𑌯𑌨𑍇𑌕𑌨𑌿𑌰𑌤𑌾 𑌵𑌯𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌤𑌾𑌸𑍍𑌲𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌪𑌤𑍇 𑌨𑌰𑌹𑌰𑍇 𑌤𑌵 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

12 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌨𑍃𑌕𑌣𑍍𑌠𑍀𑌰𑌵𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌭𑌾𑌵𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌰𑌯𑌾𑌹𑌿 𑌯𑍇𑌨 ।
𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌪𑌦𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌯 𑌕𑍃𑌤𑌾𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. வித்வான் தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ப்ரம்ஹதேசம்.]

51 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯𑌾𑌶𑍁 𑌤𑌦𑍀𑌯𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑍋𑌚𑍍𑌯 𑌚 ।
𑌅𑌵𑌰𑍁𑌹𑍍𑌯 𑌨𑌗𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍇𑌶𑌾𑌞𑍍𑌜𑌗𑌾𑌮 𑌸𑌃 ॥

52 𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍇𑌶𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌮𑌣𑍍𑌟𑌪𑌾𑌨𑍍 ।
𑌵𑌿𑌦𑌧𑍇 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑌿 𑌚 ॥

53 𑌏𑌵𑌂 𑌦𑍇𑌶𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌗𑌰𑌵𑍀𑌥𑌯𑌾 𑌗𑍌𑌰𑌵𑌪𑍂𑌰𑍍𑌣𑌨𑍇𑌕𑌾𑌨𑍍
𑌗𑌤𑍍𑌵𑌾𑌨𑍋𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌪𑌾𑌸𑌨 𑌨𑌰𑌹𑌰𑌿𑌸𑌹𑌿𑌤𑌃 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 ।
𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌂𑌵𑌿𑌤𑌨𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑌸𑌸𑌹𑌿𑌤𑌂 𑌪𑌞𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌯𑍋𑌗𑌂
𑌭𑌾𑌷𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍 𑌸𑌃 𑌯𑌤𑌿𑌨𑍃𑌪𑌤𑌿𑌸𑌮𑍋 𑌰𑌾𑌜𑌤𑍇 𑌸𑍍𑌮 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍇 ॥

54 𑌅𑌪𑌞𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌚 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌦𑍇𑌶𑌿𑌕𑌵𑌰𑍍𑌯𑌕𑌾𑌲𑍇 ।
𑌅𑌨𑌾𑌗𑌮𑌜𑍍𑌞𑌾𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌦𑍍𑌵𑌾 ॥

55 𑌉𑌗𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑍀𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌦𑌾𑌃 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍁 𑌵𑌿𑌚𑌾𑌰𑌦𑌕𑍍𑌷𑌾𑌃 ।
𑌸𑌦𑌾 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵𑌮𑌹𑌾𑌕𑌷𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑌵𑌿𑌤𑍍𑌤𑌾 𑌗𑍋𑌪𑌵𑌂𑌶𑍍𑌯 𑌸𑌵𑍇𑌤𑌾𑌃 ॥

56 𑌏𑌵𑌂 𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑌿𑌃 𑌸𑍍𑌵𑌪𑌦𑌨𑌤𑌾𑌨𑍍 𑌸𑌂𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌪𑌤𑍀𑌤𑌾
𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌭𑌃 𑌪𑌞𑍍𑌚𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌤𑌰𑌣𑌤𑌃 𑌪𑌾𑌲𑌯𑌨𑍍 𑌶𑌿𑌷𑍍𑌯𑌵𑌰𑍍𑌗𑌾𑌨𑍍 ।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍 𑌸𑌃 𑌯𑌤𑌿𑌨𑍃𑌪𑌤𑌿𑌕𑍃𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌂
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌂𑌪𑍂𑌜𑌯𑌨𑍍 𑌸𑌃 𑌚𑌰𑌣𑌶𑌰𑌣𑌗𑍋 𑌹𑍍𑌯𑌭𑍂𑌤𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑌦𑍇𑌶𑍇 ॥

57 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌗𑍋𑌤𑍍𑌰𑌜𑌨𑍁𑌷𑌾 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌾𑌗𑍍𑌰𑍇𑌯𑍁𑌷𑌾
𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌸𑍂𑌰𑌿𑌚𑌰𑌣𑌾𑌸𑌂𑌜𑌾𑌤𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌜𑍁𑌷𑌾 ।
𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌸𑍂𑌰𑌿𑌕𑌵𑌿𑌨𑌾 𑌕𑍢𑌪𑍍𑌤𑌂 𑌚𑌰𑌿𑌤𑍍𑌰𑍇 𑌮𑌹𑌾𑌨𑍍
𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌾𑌰𑍍𑌕𑌮𑌨𑍇𑌕𑌨𑍇𑌃 𑌸𑌮𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌕𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑍇 𑌪𑌞𑍍𑌚𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

பொடஜு: ப்ரவிஶ்ய ஶைவ வாதி ஜீவம் ப்ரஸாத்வாம்

ஸஞ்ஜீவயந்த்ய விஷ்ஷக்தியா: ஸ்வயந்தோ ।

ஶத்ருஸ்ய வஸ்து உரண ஶ்ரவண க்ஷமாதீ

ப்ராணாஜுமோ ஹரவதித பராஷ்ட்ராய தமேஷு ॥

இவ் வருஷம் தை மீ 14 உ சனிக்கிழமை முதல் 23 உ வரையில் **ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்ஸின் 10-வது வார்ஷிக மஹாஸபை** திருவெவ்வுளூர் (திருவள்ளூர்) ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவோலக்கத்தில் வழக்கப்படி வெகு விமர்சையாக ஸ்ரீ ஸந்நிதி நடந்தேறியது. பல **மஹோத்ஸவங்கள்** வித்வான்கள் எழுந்தருளி வேதாந்த விஷயமான வாக்யார்த்தங்களும், பரீக்ஷைகளும், கவநங்களும் நடந்து, யதோசிதம் அவரவர்களுக்கு ஸம்பாவனையும் செய்யப்பட்டது. தை மீ 23 உ திங்கட்கிழமை ஸ்ரீ அழகிய சிங்கரின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம். அன்று சென்ற வருஷங்களைவிட அதிகமாகப் பல ஸ்வாமிகளும் லௌகிக ப்ரமுகர்களும் வந்திருந்து ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்து க்ருதார்த்தர்களானார்கள். ஸபை நடந்தபொழுது சில நாட்கள் ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனியில் கொஞ்சம் ஸௌக்யக்குறைவினால் ஸதஸ்ஸில் முழுவதும் எழுந்தருளியிருக்க முடியாமல்போனது எல்லோருக்கும் ஒரு குறைபாகவே யிருந்தது. மற்றபடி ஸதஸ்ஸும், திருநக்ஷத்ரமஹோத்ஸவமும் லோகோத்தரமான ரீதியில் நடந்ததாகவே அனைவரும் நினைத்தனர்.

*   *   *   *   *

நம் ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியில் அல்லும்பகலும் மிகுந்த அக்கரைகொண்ட ஸ்ரீ அழகிய சிங்கர் தமக்கு அடுத்தபடியாக ஆஸ்தாநநிர்வாஹம் செய்வதற்கு தேவனார்விளாகம் பருத்திப்பட்டு வங்கீபுரம் வித்வான் ஸ்ரீ. உ.ப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமியை நியமித்து, அந்த ஸ்வாமிக்கு தைமீ 27உ வெள்ளிக்கிழமை ஆச்ரமஸ்வீகாரம் நடைபெற்ற விஷயத்தை நமது வாசகமஹாசயர்கள் ஸமாசாரப்பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருப்பார்களென்றே நம்புகிறோம். புதிதாக ஆஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்வாமியைப்பற்றி ஸ்ரீ வைஷ்ணவஉலகில் அநேகமாக எல்லோரும் நன்கு அறிவர்களாதலால் நமது வாசகமஹாசயர்களுக்குப் புதிதாக நாம் எடுத்துக்கூற வேண்டியதொன்றுமில்லை. ஸர்வ சரண்யன் தன் ஸங்கல்பாநுகுணமாகத் தன்னடியார்களில் அவரவர்களிடத்தில் அநுப்ரவேசம் செய்து ஸாதுக்கள் உள்ளம் குளிர்ந்து உகக்கும் வழியில் ஸத்ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியைச் செய்துவரும் ப்ரகாரம் மிகவும் ஆச்சர்யகரமானதென்பதை இந்த ஸந்தர்ப்பத்தில் எல்லோரும் உணர்ந்து மகிழ்ந்தனரென்று அறிகிறோம். இரண்டு ஸ்ரீ அழகிய சிங்கர்களாலும் நம் ஸம்ப்ரதாயம் நெடுங்காலம் நாடெங்கும் நன்கு ப்ரசாரம் செய்யப்பெற்று ஸகல சேதநவர்க்கங்களும் உய்யும் வகையில் தழைத்தோங்குமாறு ஸர்வேச்வரன் அருள் புரியவேண்டும்.

(56-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஐந்து இந்த்ரியங்களுக்கும் கர்ம இந்த்ரியங்கள் என்று பெயர். அதாவது வேலை செய்கிறதற்கு உபயோகப்படுகிற இந்த்ரியங்கள் என்று சொல்லுகிறார்கள்.

மனஸ் என்று ஒரு இந்த்ரியம். இது உடலில் இருக்கிற ஆத்மாவுக்கு ஸமீபத்தில் இருக்கிறது. ஆத்மா மனஸ்ஸின்மேல்பட்டவுடனேயே ஸமயத்துக்கு தகுந்தாற்போல் மனதானது கீழ்ச்சொன்ன பத்து இந்த்ரியங்களுக்குள் எந்த இந்த்ரியத்தோடு போய் சேருகிறதோ அப்போது அந்த இந்த்ரியம் தனக்குள்ள சக்திக்கு தகுந்ததுபோல் காரியம் செய்கிறது. அதைச் சொல்லுகிறேன் கேள்.

ஆத்மா மனதுடன் சேர்ந்ததும் மனது வேகமாக ஓடி கண் என்னும் இந்த்ரியத்துடன் சேர்ந்ததும் உடனே கண் என்கிற இந்த்ரியத்தின்வழியாக ஆத்மாவிடத்தில் ஒட்டியிருக்கும் ஜ்ஞாநம் வெளியில் உள்ள பொருள்கள் வரையிலும் பரவி அப்போது அந்த பொருள்களை விளக்கிக்காட்டுகிறது. அதனால்தான் யானையைப் பார்க்கிறேன் பசுவைப் பார்க்கிறேன் என்கிறான் ஆத்மா. இதுபோல் எல்லாவற்றையும் யோசித்து அறிந்துகொள். ஆகையால் அறியும்தன்மை செய்யுந்தன்மை வைஇ ஆத்மாவுக்குத்தான். இந்த உடலில் கீழ்ச்சொல்லிய கருவிகள் மூலமாய் ஆத்மா ஸகலத்தையும் அறிகிறான் ஸகலத்தையும் செய்கிறான்.

சிஷ்:— ஸ்வாமின் தேவரீர் சொன்னதே போதும் ஆகிலும் எந்தயிடத்தில் இதைப் பற்றி சொல்லியிருக்கிறது?

ஆசா— 'இந்த்ரியாணி தசைகஞ்ச பஞ்ச சேந்த்ரிய கோசரா:' என்று கீதையில் இந்த்ரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஜ்ஞாநீச பரதர்ஷப' என்றும் 'ஜ்ஞாநீ நித்ய யுக்த:' என்றும் 'ஏதத் யோ வேத்தி' என்றும், 'தத்வித்தி' என்றும் இம்மாதிரி அனேகயிடங்களில் 'ஜ்ஞாநீ' என்றும் ஆத்மாவைப்பற்றி சொல்லியிருக்கின்றது.

சிஷ்:— கீதையில் எந்த அத்யாயத்தில் சொல்லியிருக்கிறது?

ஆசா— தினமும் கீதையைப் படித்து வந்தாயாகில் உனக்கே தெரியும். சோம்பலை விட்டு கீதையை வாசி. வேறு ஏதாவது ஸந்தேஹமுண்டா?

சிஷ்— இந்த ஆத்மா எவ்வளவு பெரியது.

ஆசா— உருவத்தில் அதைக்காட்டிலும் சிறியது எதுவுமில்லை அதற்கு ஸமமான சிறிய வஸ்துவும் கிடையாது. 'வாலாக்ர சதபாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச ஜீவோ பாக:' என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆகையால் ஆத்மா எவ்வளவு சிறியதாக மனத்தினால் நினைக்கமுடியுமோ அவ்வளவு சிறியது.

சிஷ்— ஆத்மாக்கள் மொத்தம் எத்தனை?

ஆசா— நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன் கேள். உனக்குத் தெரிகிற மனித, ம்ருக, பக்ஷி, பாம்பு முதலியவைகளின் உடல் ஒவ்வொன்றிலும் ஆத்மா இருக்கிறதல்லவா? அவைகளை நீ எண்ணிச் சொல் பார்ப்போம்.

சிஷ்— எப்படி எண்ணமுடியும்? நமது வீடுகளில் இருக்கிற கொசு முதலியவைகளை எண்ணிமுடியாதே அதைப்போல் அனேக யிடங்களில் அனேக கூட்டங்கள் இருக்கின்றதே எப்படி எண்ணுவது ஸ்வாமி?

ஆசா— அப்படியிருக்க எவ்வளவு ஆத்மா என்று என்னைக் கேட்கிறாயே ந்யாயமா?

சிஷ்— கடவுள் கணக்கில் எத்தனை ஆத்மா? கணக்கிருக்கிறதா? சொல்லவேண்டும்.

ஆசா— லோகத்தில் எண்ணிக்கை எவ்வளவு உண்டோ அந்த கணக்கினால் எத்தனைதடவை எண்ணினாலும் ஆத்மாக்கள் எண்ணமுடியாமல் இருக்கிறபடியால் கடவுளிடத்தில் ஆத்மாக்களுடைய மொத்தக்கணக்கு கிடையாது. லோகத்திலுள்ள எல்லா ஆறுகளுடைய மணலை எண்ணமுடியாததுபோல் ஆத்மாக்களையும் மொத்தம் எவ்வளவென்று எண்ண முடியாது. இதுவரை தெரிந்து வைத்துக்கொள் இப்போது திருவள்ளூரில் ஸ்ரீ தேவனார்விளாகம் ஸ்ரீ. உப. ஸ்வாமிக்கு ஸ்ரீ அஹோபிலமடத்தில் பட்டாபிஷேகம் ஆகிவிட்டதாம். இரண்டு அழகியசிங்கர்களும் ஆச்சர்யமாக ஸேவை ஸாதிக்கின்றார்களாம். எல்லோரும் கொண்டாடுகிறார்கள். நானும் போய் ஸேவித்துவிட்டு வருகிறேன். பிறகு சொல்லுகிறேன்.

(தொடரும்)

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு 1951-ஞு ஜனவரி-மீ

சந்தா எண்		பெயரும் விலாஸமும்		வருஷம்	தொகை ரூ.	அ.
18	ஸ்ரீ	எம். கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பம்பாய்.	...	51	3	
61	,,	எல். ஸ்ரீராமாச்சாரி, ஆரணி.	...	51	3	
67	,,	டி. எஸ். பிச்சுஐயங்கார், திருக்குறுங்குடி.	...	51	3	
71	,,	எஸ். ஸௌந்தரராஜ ஐயங்கார், புத்தூர்.	...	51	3	
75	,,	டி. எஸ். நரசிம்மாசாரியார், மாயவரம்.	...	51	3	
136	,,	டி. சேஷ ஐயங்கார், பெந்தபாடு.	...	50	3	
157	,,	என். நாராயண ஐயங்கார், கல்கத்தா.	...	51	3	
177	,,	எஸ். எ. ராஜகோபால ஐயங்கார், ஆடுதுறை.	...	50	3	
293	,,	எஸ். வரதாசாரியார், மயிலாப்பூர்.	...	50	3	
239	;,	வி. எஸ். ரங்காசாரியார், கோயம்புத்தூர்.	...	51	1	
399	,,	எஸ். நாராயணஐயங்கார், துவரிமான்.	...	46-47	5	
421	,,	டி. ஸுந்திரராஜ ஐயங்கார்,திருப்பாப்புலியூர்.	...	50-51	6	
504	,,	ஆர். கோஸகாச்சாரியார், திருப்புல்லாணி.	...	49-50	6	
539	,,	ஸம்பத்நாராயணன், திருவல்லிக்கேணி.	...	51	3	
546	,,	கே. ஆர். பத்மநாபாச்சாரியார், பம்பாய்.	...	50-51	6	
611	,,	ஆர். ராமரத்னம்ஐயங்கார், டாடா நகர்.	...	48-51	10	
649	,,	எ. வி. வானமாமலாச்சாரியார், திருவஹீந்திரபுரம்.	...	51	3	
659	,,	கே. எஸ். கோபாலன், மதருஸ்.	...	51		
691	,,	எஸ். கிருஷ்ணஐயங்கார், கல்கத்தா.	...	51	3	
695	,,	வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, கல்கத்தா.	...	51	3	
761	,,	வி. எஸ். டி. ஆசார்யா, பம்பாய்.	...	50.51	6	
770	,,	கே. பத்மநாபன், கடலூர்.	...	50.51	6	
795	,,	டி. துரைசாமிஐயங்கார், ஒலக்கூர்.	...	50	0-12	
808	,,	டி. ரங்காசாரியார், செங்கல்பட்டு.	...	51	3	
814	,,	வி. டி. சேஷாத்ரிதாதாசாரியார், வேலூர்.	...	50	3	
828	,,	வி. எஸ். ஆழ்வார்ஐயங்கார், ஸ்ரீவில்லிபுத்தூர்.	...	50.51	3	
851	,,	வி. ஸ்ரீநிவாஸாச்சாரியார், பம்பாய்.	...	50.51	3	
352	,,	டி. எஸ். ராகவாச்சாரியார், பம்பாய்.	...	50-51	3	
853	,,	டி. பி. விஜயராகவாச்சாரியார், தாம்பரம்.	...	51	3	
855	,,	வி. ஆர். கோபால ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	...	51	3	
889	,,	ஆர். எஸ். தாதாசாரியார், பம்பாய்.	...	51	3	
890	,,	கே. ஆர். ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீரங்கம்.	...	51	3	
899	,,	வி. ஸௌந்தரராஜ ஐயங்கார். மதுரை.		51	3	
981	,,	எம். எஸ், ஆர். ஐயங்கார், பம்பாய்.		51	3	
987	,,	ஏ. என். ராகவாசாரியார், பம்பாய்.	...	61.53	9	
				ஆக	130	12

199521

சந்தா எண்	பெயரும் விலாஸமும்		வருஷம்	தொகை	
				ரூ.	அ.
			முன்பக்கப்படி	130	12
1043	ஸ்ரீ என். ராஜகோபால ஐயங்கார், தேனூர்.	...	51	3	
1046	,, கே. ஆர். ராஜகோபாலன், கல்கத்தா.	...	51	3	
1047	,, கே. ஆர். ஸ்ரீநிவாஸன், TEMATA	...	51	3	
1048	,, ஆர், கிருஷ்ணஸ்வாமி, கல்கத்தா	...	51	3	
1049	,, எஸ். வரதாச்சாரியார், கல்கத்தா.	...	51	3	
1050	,, ஆர். ராமஸ்வாமி கல்கத்தா.	...	51	3	
1054	,, பி. எஸ். ரங்கஸ்வாமி, ஐயங்கார், பிராந்தியன்கரை.	...	51	3	
1055	,, எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திருவள்ளூர்.	...	51	3	
1056	,, வி. எஸ். ராகவன், கல்கத்தா.	...	51	3	
1057	,, ஜீ. பி. ஸாரதி, கல்கத்தா.	...	51	3	
1058	,, டி. ரங்கஸ்வாமி, கல்கத்தா.	...	51	3	
1059	,, டி. எஸ். சாரி, கல்கத்தா.	...	51	3	
1060	,, எஸ். டி. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா.	...	51	3	
1061	,, சேஷாத்ரி அய்யங்கார், நர்ஸாபூர்.	...	51	3	
1062	,, கே. என். சாரி அண்டு கம்பெனி, மதருஸ்.	...	50-52	5	
1063	,, பி. சக்ரபாணி ஐயங்கார், முத்தியால்பேட்டை.	...	51	3	
1065	,, பி. தேசிகன், கல்கத்தா.	...	51	3	
1066	,, ஜீ. ராமபத்திரன், கல்கத்தா	...	51	3	
1067	,, என். எஸ். நாராயணன், கல்கத்தா.	...	51	3	
1068	,, ஆர். ஸ்ரீநிவாஸன், கல்கத்தா.	...	51	3	
1069	,, ஸி. வி. எஸ். தாதாசாரியார், ஸ்ரீரங்கம்.	...	51	3	
1070	,, வி. நரஸிம்ஹ ஐயங்கார், மதருஸ்.	...	51	3	
1071	,, பி. சக்ரவர்த்தி ஐயங்கார், மதருஸ்.	...	51	3	
1072	,, எ. டி. துரைஸாமி ஐயங்கார், திருவள்ளூர்.	...	51	3	
1074	,, வி. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா.	...	51	3	
1075	,, டி. டி. அனந்தாசாரியார், குளித்தலை.	...	51	1	8
			ஆக	209	4

Regd. No. M. 4437.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

தயவு செய்து கவனிக்கவும்
உங்கள் சந்தா நம்பர்

768

26

SRIKRSHNA

A Cultural Monthly

Devoted to religious and philosophical matters
and
reviewing the events of the world from
a spiritual point of view.

If you look for chaste Method, mould, motive and substance in your magazine,

SUBSCRIBE TO SRI KRSHNA

	Annual	Monthly
High School Students	Rs. 3	
College Students	4	
Non Student Adults	5	0 8 0
Reading rooms and Libraries	10	1 0 0
For those who compete for prize essays or crossword puzzles in the magazine	15	1 8 0

Apply to—The Business Manager'

'SRI KRSHNA' East III, Street, Pudukottai, S. India.

Have You Read?

THE AGRICULTURAL ECONOMIST

THE ONLY INDEPENDENT JOURNAL IN THE WHOLE OF ASIA
DEVOTED TO RURAL ECONOMICS AND WELFARE.

AGRICULTURE IS THE MAINSTAY OF ASIAN AND INDIAN ECONOMIC LIFE.
THIS JOURNAL CONTAINS OBJECTIVE AND DISPASSIONATE STUDY AND
SURVEY OF ALL VITAL CURRENT ECONOMIC PROBLEMS.

APPLY FOR PARTICULARS TO

THE MANAGER,

AGRICULTURAL ECONOMIST,

CHEMBUR P. O. BOMBAY.

Printed by Sri j. Rangachariar, Srikaryam Sri Ahobila Mutt, at 'Malola Press No, 30. Panagal street, Thiruvallur, Edited and Published by P. S. SRINIVASADESIKACHARIAR, No. 2, Audiappamudali Street, Purasawalkam, vepery, Madras-7.